சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் 81

துர்முகி ஓ மார்கழி - தை (2017 ஜனவரி - பெப்ரவரி)

இதழ் 01 - 02

திருச்சிற்றம்பலம்

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

திருச்சிற்றம்பலம்

மாணிக்கவாசக சுவாமிகள்

பொழிப்புரை:

மேகமே! முதலில் இந்தக் கடல் நீரை உட்கொண்டு, மேல் எழுந்து எம்மையுடையாளாகிய அம்மையினது திருமேனி போல நீலநிறத்தோடு விளங்கி எம்மை அடிமையாக உடையவளது சிற்றிடை போல அருட்பிரகாசம் மின்னி விளங்கி, எம்பிராட்டி திருவடிமேல் அணிந்த பொன்னினால் செய்யப்பட்ட சிலம்பு போல ஒலித்து, அவளது திருப்புருவம் போல் வானவில் விட்டு, நம்மை அடிமையாக உடையாளாகிய அவ்வம்மையினின்றும் பிரிதல் இல்லாத எங்கள் தலைவனாகிய இறைவனது அடியார்களுக்கும், பெண்களாகிய நமக்கும் அவள் திருவுளம் கொண்டு முந்திச் சுரக்கின்ற இனிய அருளே போன்று மழை பொழிவாயாக.

அறிக்கை

பொருள்	காலம்	நாள்	நேரம்	இடம்
யாகம்	01.01.2017	ஞாயிறு	காலை 8.00 மணிமுதல்	சிவதொண்டன் நிலையம் யாழ்ப்பாணம்
	05.02.2017	ஞாயிறு		
	05.03.2017	ஞாயிறு		
	02.04.2017	ஞாயிறு		
	07.05.2017	ஞாயிறு		
	04.06.2017	ஞாயிறு		
	02.07.2014	ஞாயிறு		
	06.08.2017	ஞாயிறு		
	03.09.2017	ஞாயிறு		
	01.10.2017	ஞாயிறு		
	05.11.2017	ஞாயிறு		
	03.12.2017	ஞாயிறு		
ஆயிலியம்	14.01.2017	சனி	நண்பகல்	யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையம் கொழும்புத்துறை
	10.02.2017	வெள்ளி		
	10.03.2017	வெள்ளி		
	06.04.2017	வியாழன்		
	03.05.2017	புதன்		
	31.05.2017	புதன்		
	27.06.2017	செவ்வாய்	பிற்பகல்	செங்கலடி சிவதொண்டன் நிலையம்
	24.07.2017	திங்கள்		
	21.08.2017	திங்கள்		
	17.09.2017	ஞாயிறு		
	14.09.2017	சனி		
	14.10.2017	சனி		
	11.11.2017	சனி		
	08.12.2017	ஞாயிறு		

திருவெம்பாவை, ஆருத்ரா அபிடேகம்

02.01.2017 - 11.01.2017 உதயத்திற்கு முன் திருவெம்பாவைப் பூஜை ஆரம்பமாகி மாலையில் திருவாதவூரடிகள் புராணபடனம் இடம்பெறும்.

11.01.2017 புதன்கிழமை அதிகாலை திருவடிக்குத் திவ்யமான அபிடேக ஆராதனைகள் இடம்பெறும்.

பொருளடக்கம்

	விடயம்	பக்கம்
1)	விக்ந விநாயக விமலா நமோநமோ	01
2)	சிவதொண்டன் வாழ்த்து	02
3)	திருவெம்பாவை	03
4)	கீதை வழங்கும் யோக தரிசனம் (தொடர்ச்சி)	06
5)	நற்சிந்தனை என்னும் நல்லமுதம்	09
6)	இருந்தபடி இருத்தற்கு அருந்தும் அமுத போனகம்	11
7)	திருவாசகத்தில் காண்க	13
8)	அமிர்தானுபவம் (தொடர்ச்சி)	20
9)	எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன் (ஆசிரியர்)	21
10)	நற்சிந்தனை	23
11)	Natchinthanai	25
12)	TIRUEMPAVAI	26
12)	Amirthanupavam	29

தோற்றம் துடியதனில் தோயும் திதிஅமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் – ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதம்முத்தி
நான்ற மலப்பதத்தே நாடு.

சிவயோக சுவாமிகள்

சிவதொண்டன்

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

மலர் : 81 மார்கழி - தை (2017 ஜனவரி - பெப்ரவரி) இதழ் : 01 - 02

சிவமயம்

விக்ந விநாயக விமலா நமோநமோ

இராகம் – சுத்தபங்களா தாளம் – ஆதி

பல்லவி

அடியா ருள்ளத்தே வாழும் பரனே
அஞ்சுவ தகற்றி யாள்வதுன் பரமே

அநுபல்லவி

அரகர சிவசிவ சம்போ சங்கர
அறிஞரு மறிவரி தாகிய பொருளே (அடியா)

சரணம்

அறிவாருளரோ அகம்பிர மாஸ்மி
வெகுபலம்வாசி சமாதிநீ யோசி
வேண்டும் வேண்டும் அருள்நீ தாதா
விக்ந விநாயக விமலா நமோநமோ (அடியா)

நற்சிந்தனை

சிவதொண்டன் வாழ்த்து

1. உலகத்தின் சுகங்களினை உள்ளபடி அனுபவிக்க
பலவழியை நாடிநின்று பவத்துயரில் வீழாதீர்
நிலவுலகில் துக்கமின்றி நில்லாது சுகமென்றே
சில வார்த்தை செப்பவெனச் சிவதொண்டன் வருகின்றான்.

2. எண்ணம்தான் மாறிமாறி எமையெல்லாம் தளைப்பதனை
திண்ணமாகத் தெரிவித்தே திருந்துதற்கு வழிகாட்டி
எண்ணங்கள் தோன்றுவதை எப்படியும் அவ்விடத்தில்
துண்டித்து நிறுத்திவைக்கச் சிவதொண்டன் வருகின்றான்.

3. வேதத்தின் முடிவினையும் வேறல்லா ஆகமத்தின்
போதனைகள் முழுவதையும் போதித்து நமைமீட்க
நாதத்தின் மேலான நாதாந்த நிலைகாட்டிச்
சீதமிகும் அடிதரவே சிவதொண்டன் வருகின்றான்.

4. எம்மையேநாம் என்றதனை எப்படியும் அறியாமல்
வெம்மையினாற் சுழன்றபடி வேகின்ற நிலையதுவே
நம்முடைய நிலையென்று நாம்மயங்கும் வேளையினில்
செம்மைதனை அறிவிக்கச் சிவதொண்டன் வருகின்றான்.

5. உள்ளதென்றும் இருப்பென்றும் உரைக்கின்ற நிலையினிலே
விள்ளவுமே முடியாத வியப்பெல்லாம் உண்டென்று
மெள்ளஎமக் கறிவித்து மேல்நிலையை இதுவெனவே
தெள்ளித்து வழிகாட்டச் சிவதொண்டன் வருகின்றான்.

6. சிவதொண்டன் ஆகியவன் சிவமாக ஆனவனே
சிவமாக ஆகியவன் சிவத்தினிலும் வேறல்லன்
சிவத்தினில் வேறல்லான் சிவக்காட்சி அதைஅறிவான்
சிவமாயே யாவையும்தான் சிவக்காட்சி ஆகிவிடும்.

7. அன்புமயம் ஆனவனோ அவன் நிலையை அடைவதற்கே
அன்புவழி ஒன்றுமட்டும் அருமையென அறிகின்றான்
சின்மயனாம் சிவதொண்டன் சிறப்பினையும் தெரிந்துகொண்டான்
இன்னமுமோ பலபொருள்கள் இருக்குமென உணரானாம்.

8. எண்பத்தோர் ஆண்டதனில் என்றும்போல் வருகின்றான்
அண்ணலவன் சேவையினால் ஆளாகும் எல்லோரும்
கண்ணையிமை காப்பதுபோல் காத்தவனைப் பேணிநிதம்
வண்ணமுற வளர்கவென வழுத்துவம்நாம் வாழ்த்துவமே.

திருவெம்பாவை
(சக்தியை வியந்தது)

முன்னுரை

மார்கழி மாதம் நெருங்கும் போது திருவெம் பாவைப் பாடல்களைப் பாராயணம் செய்து சில பாடல்களைச் சிந்தை செய்வது எனது இயல்பு. இவ்வாறு திருவெம்பாவைச் சிந்தனையில் ஈடுபட்டிருந்த சமயம் ரமணாச்சிரம வலைத்தளத்தில் ரமணநூற்றிரட்டு, அநுவாதநூன்மாலை ஆகிய நூல்களிற்குச் சிறந்ததொரு விளக்கவுரை எழுதிய ஸ்ரீமதி கனகம்மாள் அவர்களுடைய ரமணாச்சிரம அநுபவங்களைக் கேட்க முடிந்தது. அவர் தன் அநுபவங்களைக் கூறிக்கொண்டிருக்கும் போது "திருவண்ணாமலையில் பெண்கள் தவம் செய்தால் இலகுவில் சித்தியாகும். ஏனெனில் உண்ணாமுலை அம்மன் தவம்புரிந்து அண்ணாமலையாருடன் உடனாகிய இடம்" என்று பகவான் ரமணர் கூறியதாகக் கூறினார். இவ்வாறு கூறும் போது தன்னுடைய அநுபவத்தையும் இயைத்துக் கூறும் தொனியையும் கவனிக்க நேர்ந்தது. இக்கூற்று திருவெம்பாவைக்குச் "சக்தியை வியந்தது" என முன்னோர் இட்ட தலைப்புடன் இயைந்து செல்வதுபோலத் தோற்றச் சிந்தை களிகூர்ந்தது.

இவ்வடிப்படையில் திருவெம்பாவைத் திருப் பாடல்களை நோக்கும் போது,

1. அருளிய சந்தர்ப்பம்
2. திருவெம்பாவை வைப்பு
3. உமையம்மை தவத்தினில் இடப்பாகம் பெற்று உணர்த்திய செய்தி
4. திறவோர் காட்சி
5. உமையம்மை அருள்புரியும் வண்ணம்

என்றவாறு "சக்தியை வியந்தது" சிந்தை செய இடந்தந்து நிற்கிறது.

1. அருளிய சந்தர்ப்பம்

மாணிக்கவாசக சுவாமிகள் பெருந்துறையில் இருந்து தில்லை வரும் வழியில் திருவண்ணாமலையில் அணியண்ணாமலையார் கோயிலை வழிபட்டுச் சிலகாலம் வாசம் செய்தனர். அக்காலம் மார்கழித் திங்கள் திருவாதிரைக் காலமாய் இருந்தது. திருவாதிரைப் பத்து நாட்களும் திருமணமாகாத பெண்கள் ஒருவரை ஒருவர் விளித்து "இன்னும் எவ்வளவு காலம் அஞ்ஞானம் எனும் இருளில் தூங்கிக் கிடக்கப்போகிறீர்கள். எம்மைப் பேதித்து வளர்த் தெடுக்கும் அம்மையைப் போற்றுவோம் வாருங்கள்" என அவர்களைத் துயிலுணர்த்தி நீராட அழைத்துச் செல்கின்றனர். அங்கு தீர்த்த நீராடி அம்மை திருஉருவைச் சிறுமணலால் உருச்செய்து வழிபட்டுப் பொதுவும் சிறப்புமான பயன்களை வேண்டி நிற்கின்றனர். சாதாரண பெண்கள் பிராண நாதரை வேண்டியும் உண்மையுணர்ந்த பெண்கள் ஆன்மநாதராகிய பெருமானை அடைய வேண்டியும் பொதுவாக நல்ல மழை வேண்டியும் சிறப்பாக அருள்மழை வேண்டியும் இவ்வேண்டுதல்கள் இருந்தன. இவ்வாறு வேண்டுவார்க்கு அம்மை முன்சுரந்தளிக்கும் இன்னருள் திறங்களை மாணிக் கவாசக சுவாமிகள் கண்டனர். கண்டவண்ணம் அம்மையைப் போற்றி செய்யும் பெண்கள் பாடியதாக சக்தியை வியந்து பாடிய ஆட்கொண்டருளும் பொன்மலர்களே திருவெம்பாவைப் பாடல்கள் ஆகும். திருவண்ணாமலையில் அருளிய இத் திருவெம்பாவைப் பாடல்களில் பதினெட்டாம் பாடல் அண்ணாமலை யான் அடிக்கமலம் என்று தொடங்குவது அத் தலத்தைச் சிறப்பித்ததாகும்.

இவ்வுண்மையை,

மாதர்கொண் மாத ரெல்லாம் மார்கழித் திங்கள் தன்னில்
ஆதிரை முன்னீ ரைந்தே யாகிய தினங்க ளெல்லாம்
மேதகு மனைக டோறும் அழைத்திருள் விடிவதான
போதிவர் தம்மிற் கூடிப் புனற்றடம் ஆடல் செய்வர்

அன்னவ ரியல்பு கண்டார் ஆங்கவர் புகன்றதாக மன்னிய
திருவெம்பாவை வாசகம் பேசி

எனத் திருவாதவூரடிகள் புராணத்திலும்,

பனிநி லாக்கதிர் பரப்பிய முத்தவெண் மணலால்
பனிவ ரைக்கொடி திருவுரு பாற்பட வகுத்துப்
பனிம லர்த்தொடை சூடியும் பரவியு நோற்றுப்
பனியி றப்பினிற் படர்புன லாடுவான் படர்ந்தார்

எனும் பழம்பாடல் மூலமும் காணலாம்.

2. திருவெம்பாவை வைப்பு

திருவாசகத் திருநூலில் நீத்தல் விண்ணப்பத்தை அடுத்து திருவெம்பாவை வைக்கப்பெற்றுள்ளது. நீத்தல் விண்ணப்பத்தில் பிரபஞ்ச வைராக்கியத்தின் சிறப்புக் கூறப்பெற்றுள்ளது. பெருமானைப் பக்தி செய்யும் ஆன்மவர்க்கத்தின் பக்தித் திறங்கள் திருவெம் பாவையில் கூறப்பெற்று அப்பக்தி விளைவிற்கு துணை புரியும் அம்மையின் பேருபகாரச் செயல் சிறப்பாகக் கூறப்பெறுகிறது. வைராக்கியம் விளைந்த ஆன்மாக்

களைப் பேதித்துப் பத்தித் திறங்களில் வளர்த்தெடுக்கும் அம்மையின் கருணைத் திறம் குறித்துச் சக்தியை வியந்து திருவெம்பாவை பாடப் பெற்றுள்ளமை இதன் மூலம் அறியவருகிறது. அஞ்ஞானத் தூக்கத்தினின்றும் துயிலுணர்த்திப் பக்தியின் பாற்படுத்தும் அம்மையின் பேருபகாரத் திறம் குறித்ததனால் திருவெம்பாவை திருவாசகத்தில் சிரோமணியாகத் திகழ்கிறது.

3. உமையம்மை தவத்தினில் இடப்பாகம் பெற்று உணர்த்திய செய்தி

உமையம்மை கைலையில் பெருமானுடன் இருந்தவர். சிறு தவறை ஒரு காரணமாகக் காட்டி உலகுயிர்களுக்கு உபகாரம் செய்தற் பொருட்டு காஞ்சிமாவடியில் சிவபூசை புரிந்து திருவண்ணாமலையில் தவம் புரிந்து கிரிவலம் வந்து அண்ணாமலையாருடன் உடனாகினார். ஆன்மாக்கள் அனைத்தும் பெண்களாகவும் ஆன்மநாயகர் பெருமானாகவும் ஆன்ம வர்க்கத்தின் நோக்கம் பெருமானை அடைதலே என்பதையும் பெருமானை அடைய முயலும் நம்தம்மை ஆண்டுகொண்டருளும் சீலத்தையும் உணர்த்துவதே உண்ணாமுலை அம்மன் தவத்தினில் பெருமானுடன் உடனாகி உணர்த்திய செய்தியாகும். பெண்கள் திருவண்ணாமலையில் தவம் செய்தால் சித்தியாகும் என்பது இதன் மூலம் சிறப்பாக உணர்த்தப் பெற்ற செய்தியாகும். உண்ணாமுலையம்மன் அண்ணாமலையாருடன் உடனாகி அருள்புரியும் சீலம் திருவெம்பாவையில் ஏழை பங்காளன் (பா - 8), பேதை ஒருபால் (பா-10) , மையார் தடங்கண் மடந்தை மணவாளா (பா-11), எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த (பா-13) ஆட்கொண்டருளும் வித்தகர் தாள் (பா-15) நம்தம்மை ஆளுடை யாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் (பா - 17) என்றவாறு பல இடங்களில் போற்றிசெயப் பெற்றிருக்கிறது.

4. திறவோர் காட்சி

மாணிக்கவாசக சுவாமிகள் அம்மை நம்தம்மைக் கோதாட்டி (வினை மாசு கழித்து) அருள் சுரக்கும் இன்னருள் திறங்களைக் கண்டனர். கண்டவண்ணம் உயிர்களைப் பேதித்து வளர்த்தெடுக்கும் அம்மை தன் பாதத்திறத்தின் பெருங்கருணை வெள்ளத்தழுந்தியே திருவெம்பாவை பாடியிருக்கிறார். திருவெம்பாவை ஒவ்வொரு பாடலிலும் சக்தியை வியந்த நுட்பத்தை அன்பர்கள் கதிர் மணி விளக்கத்தில் கண்டு கொள்ளலாம்.

சீர்காழியிலே பத்தியின் பாலராகிப் பண்டு திருவடி மறவாப் பான்மையில் அழுத திருஞானசம்பந்தப் பிள்ளையார்க்கு எண்ணரிய சிவஞானத் தேனமுதைச் சுரந்தளித்து பெருமானிடம் ஆட்படுத்திய பெரிய நாயகியின் கருணையை முன்னி சம்பந்தர் தோடு என அம்மையை விளித்து எவ்வாறு பாடினாரோ அவ்வாறே திருவண்ணாமலையிலும் உண்ணா முலையம்மை பெருமானுடன் உடனாகி உயிர்களுக்கு உபகாரம் புரியும் கருணையை முன்னி 'உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய ஒருவன்' எனச் சக்தியை முன்னிறுத்தி வியந்து பாடியிருக்கிறார்.

அம்மையின் காட்சி பெற்ற குகை நமச்சிவாயர் அம்மையை உயிர்களைப் பெருமானிடம் ஏற்றிவிடும் படியாக அவளின் கருணையைப் பாடியுள்ளார். அப்பாடல் மேல்வருவது,

> படியை அளந்தவனும் பங்கயனும் காணா
> அடியை அடியேற்கு அருளும் - படியே நீ
> அண்ணா மலைமேவும் அப்பனுட னேபலகால்
> உண்ணா முலையே உரை.

இவ்வாறு திறவோர் உண்ணாமுலை அம்மன் பெருமானுடன் உடனாகி உயிர்களுக்கு உணர்த்திய செய்தியையும் அப்பெருமாட்டி ஆன்மவர்க்கத்தைப் பெருமானிடம் ஆட்படுத்தும் திறங்களையும் பலவாறாகக் கண்டு சக்தியை வியந்து பாடியுள்ளனர்.

5. உமையம்மை அருள்புரியும் வண்ணம்

உமையம்மை உயிர்களுக்கு அருள்புரியும் வண்ணம் பேதித்து வளர்த்தெடுத்தல் ஆகும். பேதித்தலாவது திரோதானசக்தி ஆணவமலத்தைக் காரியப்படுத்திப் பின் ஆணவமலம் பரிபாகமடைய அருட்சக்தியாகி பெருமானுடைய திருவடிகளை அடைவித்தலாம். திருவெம்பாவைப் பாடல்கள் முழுவதிலும் அம்மையின் பேருபகாரம் குறிப்பாகக் காட்டப் பெற்றாலும் பைங்குவளைக் கார்மலரால், காதார் குழையாட, முன்னிக்கடலை ஆகிய பாடல்களில் வெளிப்படையாகக் காட்டப்பெற்றுள்ளது.

பைங்குவளைக் கார்மலரால் என்ற திருவெம்பாவையில் மார்கழி நீராடும் பொய்கை அடியவர்க்கு எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்து அம்மையப்பராகக் காட்சி தருகிறது. இங்கு குவளைமலர் நீலமேனியளாகிய அம்மையையும் செந்தாமரை மலர் செந்தழல்புரை திருமேனியராகிய பெருமானையும் குறித்து நிற்கின்றன. பொய்கையை அம்மையப்பராகக் கண்ட அடியவர்கள் தம் பாச நீக்கத்தின் பொருட்டுக் குடைந்து குடைந்து நீராடுகின்றனர். இவ்வடியவர்களை அம்மை அருட்கண்ணால் தீர்த்த நீராட்டித் தீக்கை செய்யும் தலையாய கருணை இடம்பெறுகிறது. குவளைக் கண்ணி கூறன் காண்க என்று திருவண்டப்பகுதியில்

அம்மையின் அழகு குவளை மலருக்கு ஒப்பிடப் பெற்றிருப்பதும் அநுபவிக்கத்தக்கது. உலகியலில் தாயை அறிந்தே தந்தையை அறிவது போல அருளியலில் தாயுடன் சென்று பின் தாதையைக் கூடி என்று பட்டினத்தார் அருளியது போல் சித்தாந்த முத்திநிலைக்கு அம்மையின் பெருங்கருணை குறித்தே பிராட்டியை பைங்குவளைக் கார்மலரால் என்று முன்னிறுத்தி இப்பாடல் பாடப்பெற்றிருக்கிறது.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய்.

காதார் குழையாட எனும் பாடலில் அம்மை உயிர்களைப் பேதித்து வளர்த்தெடுக்கும் பெய்வளை என விளிக்கப்படுகிறாள்.

முன்னிக்கடலை எனும் திருவெம்பாவையில் உலகுக்கு உபகாரமான மழையை விளிப்பது போல் உயிர்களுக்கு உபகாரம் புரியும் அம்மையின் அருள் மழையை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்திருக்கிறார். மேகமானது எவ்வாறு கடலில் நீரை முகந்து கார்நிறத்ததாகச் சூல்கொண் டெழுந்து உலகுக்கு மழை பொழியுமோ அவ்வாறே கார்நிறத் தவளான அம்மையும் பேரருட் திறங்களால் அருள் மழை பொழிகிறாள். மழை பொழியும் போது மின்னல் மின்னி முழங்குவது போல் ஆன்மவர்க்கத்தை ஆட்கொளவரும் நிலையில் அம்மையின் அருட்பிர காசமே வண்ணமாக மின்னவும் வந்'தோம்' வந்'தோம்' எனும் அபயந்தரும் ஓசையாக திருவடித் தாமரைகளின் சிலம்பொலி அலம்பவும் வருகிறார். கார்கால வானில் வானவில் தோன்றுமாப்போல் கடைக்கண் நோக்கம் செய்யும் அருளினால் திருப்புருவம் வளைந்து தோன்றவும் அம்மையின் பேரருட்திறம் அழகாகக் காட்டப்பெற்றுள்ளது.

இத் திருப்பாடலுக்கு மகோபாத்தியாய கதிரேசச் செட்டியார் காட்டும் கதிர்மணி விளக்கச் சுருக்கம் மேல்வருவது,

இங்கு உமையம்மை உடையாள், எமையுடையாள், எம்பிராட்டி, நந்தம்மையாளுடையாள், அவள் என ஐந்து விதமாக குறிக்கப்பெற்றிருக்கிறார். ஐவகை யாக அம்மை குறிக்கப்பெறுவது அவள் ஐந்து சக்திகளாக அமைந்து உயிர்களுக்குப் பேரின்பத்தை கூட்டுதற் பொருட்டாம். தனாதருளின் பஞ்சவித ரூப பரசுகமாய் எனக் கந்தர் கலிவெண்பாவிலும் இவ்வுண்மை காட்டப்பெற்றிருக்கிறது. மணி வாசகரின் இயற்கை மழையும் அருள் மழையும் தரும் அப்பாடல் மேல்வருமாறு,

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவணமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய்.

முடிவுரை

இத்திருவெம்பாவைத் திருப்பாடல்களில் ஆன்ம நாயகனாகிய இறைவனை அடைவதற்குரிய பக்குவமுதிர்ந்த உயிர்களையே கன்னிப் பெண்க ளாகவும், ஆணவ மல இருளில் பிணிப்புண்டிருத் தலையே துயில் கொள்பவராகவும், மல இருள் நீக்கமே துயலுணர்தலாகவும், மலபரிபாகமுற்ற உயிர்கள் அஃதில்லா உயிர்களை அருளியலில் செல்ல அழைத்தலை நீராட அழைத்ததாகவும் அமைத்து பிரபஞ்ச வைராக்கியம் விளைந்த ஆன்மாக்களைப் பக்தித் திறங்களில் வளர்த்தெடுக்கும் அம்மையின் கருணை வியக்கப்பெற்றிருக்கிறது. இதனாலேயே சக்தியை வியந்து பாடியது என முன்னோர் தலைப் பிட்டுள்ளனர். அம்மையின் ஆட்கொண்டருளும் வண்ணங்கள் கூறும் இத்திருவெம்பாவைப் பாடல்கள் அம்மையின் மந்திர சொரூபமானவை. அம்மை எவ்வாறு தலையளி புரிகிறாரோ அவ்வாறு இத் திருவெம்பாவைப் பாடல்களும் எம்மை ஆட்கொண் டருளும் திருப்பாடல்களே. இக்காரணம் பற்றியே பெருமானும் பாவை பாடிய வாயால் கோவை பாடுக என மாணிக்கவாசக சுவாமிகளைப் பணித்திருக்கிறார். திருக்கோவையாரில் அம்மையாகிய ஆன்மா பெருமானை அடையும் விதம் இருபத்தைந்து துறைகளாக வகுத்து அகப்பொருள் மரபில் விளக்கப்பெற்றுள்ளது. திருவண்ணாமலையில் அம்மை தவத்தினில் இடப்பாகம் பெற்று உயிர்கள் ஆன்மநாயகரை அடையவேண்டிய செய்தியை உளத்தில் கொண்டு,

அவளை அறியா அமரரும் இல்லை
அவளன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவளன்றி ஐவரால் ஆவதொன்றில்லை
அவளன்றி ஊர்புகும் ஆறறியேனே

என்று திருமந்திரம் சக்தியை வியப்பது போல் சக்தியை வியந்த திருவெம்பாவைப் பாடல்களை திருவெம்பாவைக் காலங்களில் ஓதி அம்மையின் பேரருட் திறங்களுக்கு ஆட்படுவோம்.

கீதை வழங்கும் யோக தரிசனம் (தொடர்ச்சி)
கீதை பிறந்த சூழல்

0.1 கீதைக்குள் கிடக்கும் அர்த்தம்

கீதையை ஆராய்வதற்கு முன் அது பிறந்த சூழல் பற்றிச் சிலவார்த்தைகள் கூறுவது அதன் உள்ளே இருக்கும் அர்த்தத்தைப் புரிந்துகொள்ள மிகவும் உதவியாக இருக்கும். கீதை பிறந்த சூழலை மகாபாரத நிகழ்ச்சிகளில் கண்டுகொள்ள முடியும். கீதை மகாபாரத இதிகாசத்தின் ஒரு பகுதி என்பதைப் பலர் அறிந்திருக்காமலும் இருக்கக்கூடும். கீதை பிறந்தசூழல் மகாபாரதத்தில் மிகப்பொருத்தமான ஓர் இடத்தில் அது வைக்கப்பெற்றுள்ளதைக் கொண்டு அறியலாம். கீதையின் உள்ளார்ந்த அர்த்தத்தைப் புரிந்து கொள்ளுவதற்கு மகாபாரதத்தில் குறிப்பிடப்பெறும் நிகழ்ச்சிகள் போதிய அளவு ஒளி பாய்ச்சிக் கொண்டு இருக்கின்றன.

0.2 பாண்டவர்களும் கௌரவர்களும் குருஷேத்திரத்தில்

அர்ச்சுனன் தேவேந்திரனது அனுக்கிரகத்தால் குந்தி வயிற்றில் தெய்வீகமாகப் பிறந்தவன் ஆவான். அவன் தனது நான்கு சகோதரர்களோடும், ஒன்று விட்ட சகோதரர்களான கௌரவர்களோடும் திருதிராட்டினனது அரண்மனையில் வளர்க்கப் பெறுகின்றான். திருதிராட்டினன் குருடனாக இருந்த காரணத்தினால் அரசுகுச் சட்டரீதியாக உரிமையற்றவன் ஆவான். எனினும் அரசுரிமையைப் பறித்துத் தானே அரசனானான். அரசுரிமையை அபகரித்ததோடு திருப்திகொள்ளாது தனது மக்களான கௌரவர் களுக்கும் பாண்டவர்களுக்கும் இடையே வேறுபாட் டையும் காட்டி வந்தான். அத்தோடு தனது மக்களுக்கே கூடிய சலுகைகளை வழங்கி வந்தான். இதனால் இரு பகுதியினருக்கும் இடையே வெறுப்பு வளர்ந்து வந்தது. அந்த இரண்டு பகுதியினருக்கும் இடையே அரசுரிமை யைப் பகிர்ந்த போதும் அது மிகக் குறுகிய காலமே இரண்டு பகுதிகளாக இருந்தது. பாண்டவர்களது அரசுரிமை ஏமாற்றும் ஒரு சூதாட்ட வைபவத்தினால் பறிக்கப்பட்டது. அத்துடன் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் நாடுகடத்தப்பெற்றமையால் காட்டில் அலையவும் அதன்பின் ஓராண்டு தலைமறைவாக வாழவும் பணிக்கப்பெற்றனர். பதின்மூன்று ஆண்டுகள் கடந்த பின்பும் தனது மூத்த மகனும் பிடிவாதக் காரனுமான துரியோதனனைத் திருதிராட்டினன் பாண்டவர்களது அரசுரிமையைத் திருப்பி வழங்குமாறு கூறமுடியாத அளவுக்குப் பலவீனமானவனாக இருந்தான். திருதிராட்டினனது தேரோட்டியான சஞ்சயனும், கிருஷ்ணனும் அந்த இரு பகுதியினரையும் இணங்கச் செய்யும் எல்லா முயற்சிகளும் இறுதியில் தோல்வி அடைந்தன. அதனால் அவர்களுக்கு இடையே யுத்தம் தவிர்க்க முடியாதது ஆயிற்று. இந்தச் சமயத்திலேதான் கீதை உதயமாயிற்று.

0.3 மறைஞானத்தின் குறியீடு

மகாபாரதத்தில் வரும் அத்தனை நிகழ்ச்சிகளும் தமக்குப் பின்னால் எவற்றையோ சொல்லும் குறியீடுகள் தான் என ஆராயவேண்டிய தேவை இல்லை. மகாபாரதம் முழுவதும் தொடர்ச்சியாகக் குறியீடுகளைக் கொண்டுள்ளது என ஆராய்வதும் சாத்தியமா என்பதும் கேள்விக்கு உரியதே. எனினும் மகாபாரத நிகழ்ச்சிகளுக்குள் ஒரு உள்ளார்ந்த முக்கியத்துவம் உண்டு என்பதை அதனைப் பார்க்கக் கூடியவர்கள் அறிவார்கள். மகாபாரதத்தை எழுதிய ஆசிரியர் அதனை எழுதும்போது அவ்வாறான குறியீடுகளை மனதில் கொண்டு இருந்தாரா என்பதும் எமக்குத் தெரியாது. ஆனால் பெரிய கலைப் படைப்புகளுக்குப் பின்னால் குறியீட்டுஅர்த்தம் பெரிதும் விரவி இருக்கின்றன என்றே அறிஞர் கருதுகின்றனர். எனினும் அவற்றின் படைப்பாளிகள் அக்குறியீட்டு அர்த்தத்தைத் திட்டமிட்டு மேற் கொண்டனர் என்று கூறுவதற்கு இல்லை. சாதாரண மனித சிந்தனைக்கு அப்பாற்பட்ட ஓர் இடத்தில் இருந்து அப்படைப்பாளிகள் தமது ஆழமான கருத்துக் களைப் பெற்றிருக்கின்றார்கள் என்பதை அவர்களே கூறியிருக்கின்றார்கள். அவை அவர்களது தலையில் இருந்து உதித்தன அல்ல. அவை அந்தக் கலைஞர்களது ஆழ்ந்த அறிவில் இருந்து உதித்த படியினால்தான் அவை மேலெழுந்த வாரியாகக் காணும் அர்த்தத்தை விட ஆழமான அர்த்தம் உடையனவாக இருக்கின்றன. அவை அவ்வாறானவை அல்ல எனின் நாமும் பிளேட்டோவைப் போலக் கலை என்பது நிழலின் நிழல் என்று புறக்கணித்திருப்போம்.

0.4 குறியீட்டு அழகு

நவீன பிளேட்டோ வழிவந்த மறைஞானியான பொர்பிறி என்பவர் ஹோமருடைய இதிகாசத்தில் எண்ணற்ற குறியீடுகள் இருப்பதைச் சுட்டிக்காட் டியுள்ளார். பெரும்பாலான நவீன அறிஞர்கள் அவ்வாறான விளக்கங்கள் எல்லாம் நூலாசிரியர் ஒருபோதும் கருதியிருக்காதவற்றை நூலில் வாசிக்கப் படுபவை என நிராகரிக்கின்றனர். அதில் உண்மை உண்டு எனக் கூற முடியாது. அவ்வாறு அவர்கள் அந்நூலை நோக்குவது அதனை ஆழமாகக் கற்காது மேலெழுந்தவாரியாகக் கற்றதன் விளை வாகும்.

அவர்களது கருத்து உயர்ந்த கலையின் தன்மைகளை அறிந்துகொள்ள முடியாததன் காரணமாக எழுந்ததாகும். உயர்ந்தகலை எப்போதும் குறியீடு கள் உள்ளனவாகவே இருக்கும். அக்கலை பிறந்ததே சாதாரண ஒரு நிலையில் அன்றிக் குறியீட்டு நிலையில் ஆகும். இக்கருத்து ஹோமரின் ஒடிசி என்ற இதிகாசத் திற்குப் பொருந்தும் என்பது உண்மை. அவ்வாறெனின் அக்கருத்து மகாபாரத இதிகாசத்திற்கு நன்கு பொருந்தும் என்பது பலமடங்கு உண்மையாகும். அதற்குக்காரணம் மகாபாரதம் உலகில் உள்ள எல்லாப் பண்பாடுகளையும், எல்லா அபிலாட்சைகளையும், எல்லா மரபுகளையும், மனித சமுதாயம் முழுவதையும் பிரதிபலிப்பதனால் ஆகும். குறியீடுகள் தமக்கெனவே அழகுள்ளன ஆகும். ஒருவர் குறியீடுகளில் அழகைக் கண்டால் என்ன, அவரால் அவ்வழகைக் காணமுடியா விட்டால் என்ன, அவை இயல்பாகவே அழகு உள்ளன. அங்ஙனம் அவற்றில் உள்ள அழகைக் கண்டால் ஒரு கலைப்படைப்பாளி திட்டமிட்டு அவ்வழகை உருவாக்கக் குறியீடுகளைத் திட்டமிட்டாரா இல்லையா என்பது ஆராயவேண்டிய விடயம் இல்லை.

0.5 மகாபாரதக் குறியீடுகள் கீதைக்கு ஒளிபாய்ச்சும்

"கீதை வழங்கும் யோகதரிசனம்" என்ற நூலின் அமைப்பு ஆன்மிக நூல்களையோ மகாபாரத நிகழ்ச்சிகள்யாவற்றையுமோ அடிப்படையாகக் கொண்டது அன்று. மகாபாரத நிகழ்ச்சிகள் யாவற்றுக்கும் குறியீட்டு விளக்கம் காண்பது முடியுமா என்பது மட்டுமன்றி எமது நூலின் எல்லைக்கு அப்பாற்பட்டதும் ஆகும். ஆனால் கீதையைப் புரிந்து கொள்ள ஒளிபாய்ச்சக்கூடிய நிகழ்ச்சிகளை விளங்கிக் கொள்வது மிகவும் பயனுள்ளது என்பதை யாரும் மறுக்கமுடியாது.

0.6 பாண்டவருள் அர்ச்சுனனின் முதன்மை

பாண்டவர்களுள் மூத்தவனாக இல்லாவிடினும் அர்ச்சுனனே முதன்மையானவனாகத் திகழ்கின்றான். சுயம்வரத்தில் திரௌபதியை வென்றெடுத்தவனும் அவனே. அவனை மட்டுமே உண்மையில் அவளும் விரும்பியிருந்தாள். பெரிய சாதனைகளைச் செய்து முடித்த தீரனும் அவனே. யுதிஷ்டிரன் தர்மவிடயத்தில் மேம்பட்டவன் என்பதும் பீமன் சாகசங்கள் செய்பவன் என்பதும் உண்மையே. ஆனால் பாண்டவர்கள் அர்ச்சுனனின் ஆற்றலிலேயே தங்கி இருந்தனர். அர்ச்சுனனே கைலாசத்துக்குச் சென்று சிவபிரானிடம் பாசுபதாஸ்திரத்தைப் பெற்றான். கிருஷ்ணனுடைய விசேட நண்பனும் அர்ச்சுனனே ஆவான். இதனைக் கீதையின் பத்தாவது அத்தியாயத்தில் கிருஷ்ணனே கூறியிருக்கின்றான். அந்த அத்தியாயத்தில் கிருஷ்ணன் யுதிஷ்டிரன் அன்றி அர்ச்சுனனே பாண்டவர்களுள் முதன்மையானவன் என்பதையும் கூறியுள்ளான். பாகவதத்தில் புருசோத்தமனது வைகுண்டத்துக்கு கிருஷ்ணனோடு சென்றவனும் அர்ச்சுனன் என்றே கூறப்பெற்றுள்ளது. அங்கும் புருஷோத்தமன் அர்ச்சுனனை இரண்டாவது கிருஷ்ணன் என்றே அழைக்கிறான். மகாபாரதத்திலும் யுதிஷ்டிரனும் தேவலோகத்தில் அர்ச்சுனனும் கிருஷ்ணனும் வரும்போது அவர்களை மானிடர்களில் மிக உயர்ந்த இருவர் என்று கூறுவதைக் காண்கிறோம்.

0.7 இரண்டு பறவைகள்

அர்ச்சுனனும் கிருஷ்ணனும் இணைபிரியாத நண்பர்கள் ஆவர். நரனையும் நாராயணனையும் அவர்கள் இருவரும் பிரதிபலிப்பவர்களாகவே அறியப்பெறுகின்றார்கள். நரனும் நாராயணனும் மனித ஆத்மாவும் தெய்வ ஆத்மாவும் ஆவர். அதாவது ஜீவாத்மாவும் பரமாத்மாவும் ஆவர். உபநிடதத்தில் விபரிக்கப்பெறுகின்ற இரண்டு பறவைகளும் அவர்களே ஆவர். அந்த இரண்டு பறவைகளும் இணைபிரியாத நண்பர்கள் ஆவர். அவை உடம்பு என்ற ஒரே மரத்திலேயே இருக்கின்றன. மனித ஆத்மா பழங்களைப் புசிக்கின்றது. பரமாத்மா சாட்சியாகப் பார்த்துக்கொண்டு இருக்கின்றது. இறைவனே நரன், நாராயணன் எனும் இரட்டைப் பிறவிகளாகப் பிறந்து இரண்டு ரிஷிகளாக வாழ்ந்தவர்கள் என்பது வரலாறு. அவர்கள் இருவரும் இமாலயத்தில் தவம் இயற்றினார்கள். ஆனால் இந்த வரலாறும் குறியீட்டு அர்த்தம் உடையது. ரிஷி என்ற வார்த்தைக்கு அர்த்தம் உண்மையைக் கண்டவர் என்பதே ஆகும். உண்மையைக் காண்பது ஆத்மா மட்டுமே. எது கண்ணினூடாகப் பார்க்கிறதோ எதைக் கண் பார்க்க முடியாதோ அது ஆத்மா என்கிறது உடநிடதம். நரன், நாராயணன் என்னும் இரண்டு ரிஷிகளும் ஒரே உடம்பில் வசிக்கும் இரண்டு ஆத்மாக்களையுமே குறியீடாகக் கொள்ளப்பெறுகிறது. அந்த இரண்டு ரிஷிகளும் தவம் இயற்றிய இடமும் முக்கியமானது ஆகும். பத்ரி என்ற இடத்திலேதான் அவ்விருவரும் தவம் இயற்றினர். பத்ரி என்ற வார்த்தையின் அர்த்தம் சுவையான கனிகளை உடையமரம் என்பது ஆகும். எனவே அந்த இடம் குறியீடாக உபநிடதத்தில் வரும் இரு பறவைகள் இருக்கும் சுவையான பழங்களுள்ள மரத்தையே குறிக்கின்றது.

0.8 பிரவிருத்தியும் நிவிருத்தியும்

அர்ச்சுனனதும் கிருஷ்ணனதும் முக்கியத்துவத்தை அவதானித்தோம். இனிப்பாண்டவர்களையும் கௌரவர்களையும் பற்றி அவதானிக்க வேண்டும். கீதையின் பதினாறாவது அத்தியாயத்தில் கிருஷ்ணன் படைப்பில் உள்ள இரண்டு பெரிய போக்குகளுக்கு இடையே வித்தியாசத்தை எடுத்துக்காட்டுகின்றார். அவற்றை அவர் தெய்வப்பண்பு என்றும் அசுரப்பண்பு

என்றும் பெயர் இடுகின்றார். இந்த இருபண்புகளையுமே குறியீடாகப் பாண்டவர்களும் கௌரவர்களும் சுட்டுகின்றனர். அந்த இரு பண்புகளையும் நிவிருத்தி, பிரவிருத்தி எனவும் அழைக்கப்பெறும். உலக நாட்டத்தை விடுத்து மேலும் மேலும் ஆன்மிக நாட்டத்தில் செல்வதை நிவிருத்தி என அழைக்கப்படும். உலக நாட்டத்திலேயே மேலும் மேலும் செல்வதைப் பிரவிருத்தி எனப்படும். பொதுவாக இவற்றை நற்பண்புகள், கெட்டபண்புகள் என்று வழமையில் கூறினாலும் கீதை இவற்றுக்கு மிகப் பரந்ததும் ஆழ்ந்ததுமான அர்த்தத்தை வழங்குகின்றது. தெய்வீகப்பண்பும், அசுரப்பண்பும் இறைவனிடம் இருந்து உருவாகி அவனிடத்திலேயே இறுதியில் இலயம் அடைந்து ஒடுங்குகின்றன.

0.9 கீதையின் அமைப்பு

கீதையின் அமைப்பில் திருதிராட்டினனைப் பற்றியும், சஞ்சயனைப் பற்றியும் சற்று விரிவாக அறிய வேண்டும். கீதை கிருஷ்ணனால் உபதேசிக்கப்பெற்றது. யுத்தத்தில் கிருஷ்ணன் தேரோட்டியாக அமர்ந்தான். கிருஷ்ணன் யுத்தம் ஆரம்பிக்கும் சமயத்தில் அர்ச்சுனனுக்குப் போதித்தவற்றைத் தூர இருந்தே கேட்கும் ஆற்றலைச் சஞ்சயன் வியாசரது அருளால் பெற்றுக் கொண்டான். அதனையே சஞ்சயன் திருதிராட்டினனுக்குக் கூறினான். சஞ்சயன் திருதிராட்டினனுக்குக் கூறும் அமைப்பிலேயே கீதையின் போதனைகள் இருக்கின்றன.

0.10 தேரோட்டி

சஞ்சயன் திருதிராட்டினனது தேரோட்டி, கிருஷ்ணன் அர்ச்சுனனது தேரோட்டி. கீதையில் இந்த இரண்டு தேரோட்டிகளினதும் முக்கியத்துவத்தையும் ஓரளவு அறிய வேண்டும். கிருஷ்ணன் தெய்வீக ஆன்மா. அவனே மனித ஆன்மாவுக்கு வாழ்வு அளிக்கும் ஞானத்தை வழங்கினான். தேரோட்டி என்ற குறியீடு உபநிடதங்களில் வருகிறது. பிளேட்டோவின் உரையாடல்களிலும் தேரோட்டி என்ற குறியீட்டைக் காணலாம். உபநிடதத்தில் உடம்பு என்ற தேரில் சவாரி செய்பவனாக மனித ஆன்மா விபரிக்கப்பெறுகின்றது. அங்கு புத்தி தேரோட்டியாகக் கொள்ளப்பெறுகிறது. ஆனால் கீதையில் அக்குறியீடு சற்று வித்தியாசமாகக் காட்டப்பெறுகிறது.

ஜீவாத்மாவான அர்ச்சுனன் கீதையிலும் சவாரி செய்பவனாகவே காட்டப்பெறுகிறான். ஆனால் கீதையில் பரமாத்மாவான கிருஷ்ணன்தான் தேரோட்டி.

கீதைக்கும் உபநிடதத்துக்கும் தேரோட்டி பற்றிய இவ்வேறுபாடு வெளித்தோற்றத்தில் அன்றி உண்மையில் இல்லை என்பதை அறிய வேண்டும். கிருஷ்ணன் தேரோட்டி பரமாத்மா என்றால் அறியும் ஆற்றல் புத்தி ஆகும். கடோபநிடதத்தில் புத்திக்கும் பரமாத்மாவுக்கும் வேறுபாடு காட்டப்பெறுவது உண்மையே. ஆனால் அங்கேயே இறுதியில் அவை இரண்டும் ஒன்றாக்கப் பெறுவதையும் காணலாம். கிருஷ்ணன் அணிந்துள்ள மஞ்சல் ஆடைக் குறியீட்டினால் புத்தி காட்டப்பெறுகிறது. எனவே அந்த வகையில் கிருஷ்ணனும் புத்தியும் ஒன்றே.

0.11 ஜீவாத்மா

ஜீவாத்மா மனத்தோடு கூடியது. கீதை ஜீவாத்மாவைத் தேகி என்று அழைக்கின்றது. தேகி என்ற ஜீவாத்மா உடலில் வசிக்கின்றது. அதனை ஒவ்வொரு பிறப்பிலும் தொடர்ந்து வரும் நான் என்ற அகந்தை எனப்பெறும். உபநிடதத்தில் இதயத்தில் அங்குட்டப் பிரமாணமாக அது வசிக்கின்றது எனக் கூறப்பெற்றுள்ளது. இதை ஒரு பழங்கால மூடக் கொள்கை என்று எண்ணக் கூடாது. அது மனத்தில் ஜீவாத்மாவின் குறியீடாக காட்டப்பெறுகிறது. நாம் சாதாரண வழக்கிலும் இதயத்திலேயே மனத்தைக் குறிப்பிட்டு வருகிறோம். இன்று விஞ்ஞான வளர்ச்சியினால் நனவுக்கும் மூளைக்கும் உள்ள தொடர்பாக நாம் மனத்தை அறிகிறோம். எவ்வாறெனினும் நாம் ஜீவாத்மாவை மனத்தோடு சேர்த்தே அனுபவிக்கின்றோம்.

இந்தியாவில் உள்ள தத்துவ அமைப்பு வளர்ச்சியில் இன்று மனத்தோடு ஜீவனை இனங்காணுவது பலருக்குப் புதிராகத் தோன்றலாம். ஆனால் இருக்கு வேதத்தில் ஜீவாத்மாவை மனம் என்றே கூறப் பெறுவதைக் காணலாம். ஜீவாத்மாவை பிராணன் என்ற மூச்சுக்காற்றாகவும் கூறப்பெறுவதைக் காணலாம்.

ஒரு கருத்து இவ்வாறு மாற்றம் அடைவது மறைஞானத்தில் எங்கும் உள்ளது. உயர்ந்த ஆன்மிகக் கருத்துக்களை உருவாக்கிய முனிவர்கள் மனம் கடந்தநிலையில் தாம் அனுபவித்தவற்றைக் கூறும் ஒரு கருத்துப் பின் வந்தவர்களால் மனத்துக்கு உட்பட்ட கருத்தாக மாறுவது ஒரு நியதியாக இருந்து வந்துள்ளது. இதனால் மனம் கடந்த உயர்நிலைக்கருத்து ஒன்றை கூறப் பின் வேறுவார்த்தை வேண்டி இருந்தது. இவ்வாறுதான் ஜீவாத்மாவைக் குறித்த மனம் என்ற வார்த்தை விடு பட அந்த மனம் சிந்தனை செய்யும் ஆற்றலுள்ள ஒரு வஸ்துவாக மாறிற்று.

தொடரும்...

நற்சிந்தனை என்னும் நல்லமுதம்

0.1 பாராயணப் பனுவல்

சுவாமிகள் தமது அன்பர்கள் சிலரிடம் நற்சிந்தனைப் பாடல்களை நாடோறும் ஓதிவருமாறு பணித்திருக்கின்றார். நற்சிந்தனைப் பாடல்கள் சிலவற்றின் இறுதிச் செய்யுள்களிலே அப்பாடல்களைக் காலையும் மாலையும் ஓதுமாறும், அவற்றைத் தாகமாகப் புகலுமாறும் கூறியிருக்கின்றார்.

'வாலை வணக்கமாய் மகிழ்ந்த பாவினைக்
காலையும் மாலையும் ஓதக் கவலை போம்'

'யோகநாதன் உரைத்த இசைத்தமிழ்
தாக மாகவே தாம்புகல் வார்தமக்கு
ஆக வேண்டிய யாவுமாம் அந்தியில்
யோக நாதன் அடிமலர் உய்வரே'

சுவாமி வாக்கிற் கேற்ப அன்பாளர் பலர் நற்சிந்தனைத் திருநூலைப் பூசை அறையில் வைத்து நாடோறும் சில பாடல்களைப் பாடுவதை நியமமாகக் கொண்டு ஒழுகுகின்றனர். இதனைச் சுவாமிகளைப் பூசிக்கும் ஒரு கருமமாகவே நினைந்து செய்கின்றனர். அவர்கள் சுவாமி வாக்கைத் தம்மாலியன்றவாறு பேணுவது தக்கதே.

0.2 சிந்தனைக்குரியதிருநூல்

சுவாமிகள் நற்சிந்தனையைப் பாராயணம் செய்யும் ஓர் அன்பரின் முன்னிலையில் நின்று தம் நெஞ்சைத் தொட்டுக்காட்டி நற்சிந்தனை இங்குள்ளது எனக் கூறினார். நற்சிந்தனை புத்தகத்திலும், இனிதாகப் பாடும் நாவிலுமன்றிச் சிந்தையிலுள்ளது என்பதும் அதனைச் சிந்தித்துத் தெளிதலே தக்கதென்பதும் சுவாமிகள் கூறியதன் குறிப்பாகும். நல்லுரை, நன்னூல் என்றவாறன்றி நற்சிந்தனை என்னும் நாமம் சூடியுள்ளதன் காரணம் அது சிந்தனைக் குரியது என்பதேயாம். குருநாதன் அருள்வாசகம் என்ற நற்சிந்தனையிலே சுவாமிகள் சில அருள்வாசகங்களைக் கூறிய பின் இப்படியே **'இடையறாது சிந்தித்துச் சிந்தித்து'** எனக் கூறுகிறார். இது நற்சிந்னை வாசகங்கள் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து சிந்தையில் இருத்தவேண்டியன என்பதற்குச் சிறந்த சான்றாகும். மேலும் முத்திநல்குமே என்ற நெடும் பாட்டு முடிவிடத்தை நெருங்குமிடத்து **'சிந்தி சிந்தி சிந்தி சிவகதி மந்திரமிதுவே மனத்திடை மதியே'** என்றோர் வாசகம் வருகிறது. இதன் பொருள் சிந்தித்துணர்தலே நற்சிந்தனையில் மந்திரமாக மதித்தற்குரியதென்பது தெளிவு. மேலும் நற்சிந்தனை வெண்பாக்கள் சிலவற்றின் இறுதிச்சீர் **சிந்தி, உணர், நினை ஓர்** என்ற சொற்களால் இயன்றிருக்கின்றது. இவையாவும் உள்ளத்தில் உள்ளும் உள்ளச் செயற் பாடுகளே. இந்தச் சிந்தனையின் முக்கியத்துவத்தை நெஞ்சத்திருத்துதற்கு ஒரு வசன நற்சிந்தனைப் பகுதியை நோக்குதல் நன்று;

'...இருக்கும் போதும், நிற்கும் போதும், நடக்கும்போதும், கிடக்கும் போதும் நினை... உனது நரம்பிலும், தசையிலும், இரத்தத்திலும் தெய்வம் என்னும் நினைவே நிறைவதாக...'

ஆகவே, நற்சிந்தனை கிளிப்பிள்ளை போலச் சொல்வதற்கும், இனிதாகப் பாடி மகிழ்வதற்கும், அல்லது இதுபோல எழுதிக் குவிப்பதற்குமாகச் சுவாமிகளால் அருளப்பெறவில்லை. அது இடையறாது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான நினைவுகளை அகற்றி நற்சிந்தையைத் துலங்கச் செய்தற் பொருட்டே அருளப்பெற்றது என்பது தெளிவு. படிப்போருக்குச் சுவாமிகளது நற்சிந்தை தொற்றிக் கொள்ளும் அளவு இச்சிந்தனை ஆழ நீள நினைதலாக அமைதல் வேண்டும்.

0.3 சுவானுபவப்படிவு

நற்சிந்தனையை வேதம் எனப் போற்றிவந்த ஒரன்பரின் முன்னே சுவாமிகள் புத்தகத்தைச் சுழற்றி எறிவது போற் சைகைகாட்டி அவ்வன்பரின் நெஞ்சத்தைச் சுட்டி "நற்சிந்தனை உன் நெஞ்சி லுள்ளது; அந்த நெஞ்சப் புத்தகத்தைப் புரட்டிப் புரட்டிப் படி" என அருளினார். இன்னோரன்பரிடம் "இந்த என் நெஞ்சில் உள்ளது தான் உன் நெஞ்சிலு முளது. அதனை நீயே அறி" எனவும் கூறினார். சுவாமி கள் அருளிச்செய்த நற்சிந்தனை அவர் தமதகத்தே அனுபவிக்கும் அவர்தம் சொந்த அநுபூதியிலிருந்து மலர்ந்தது. அந்த அநுபூதி எல்லாரது அகத்தும் உளது. அவரவர் அகத்திலுள்ளது அவரவர்க்குச் சொந் தமானது. அச் சொந்த அநுபூதியை ஒவ்வொருவரும் தம்முள்ளே அனுபவித்து மகிழலாம். ஆதலால் தாம் அருளிச்செய்த நற்சிந்தனையை ஒரு வழிகாட்டியாகக் கொண்டு படிப்போர் தமதகத்தே ஊறிவரும் நற்சிந் தனையை அனுபவித்தலே தக்கதென்பது சுவாமிகளது குறிப்பாகும்.

மேலும், உண்மை உரையிறந்தது. அது உரையில் வாராது. உள்ளே இருப்பதுதான் அதன் இயல்பு. வெளிப்பட்டால் அது உண்மையாகாது. ஆதலால் உண்மையைக் கூற வாய் திறப்பதே பிழை. வாய்திறந்து கூறினால் அது உண்மையில் ஒரு கீறல் கீறியது

போலாகிவிடும். உண்மை நாதாந்தத்திலுள்ளது. அது நாததத்துவத்துள் அடங்காது; தத்துவம் யாவும் சடம். சடத்துவத்திலுள்ள மொழியால் சத்தியத்தை அளத்தல் சாலாது. ஆகவே மொழிக்குள் இறங்குமிடத்து உண்மை கறைபட்டு விடும். அதில் உண்மையல்லாததும் புகுந்துவிடும். உண்மையுணர்ந்தவரான அபிராமிப் பட்டர் **"பொய்யும் மெய்யும் புகலவைத்தாய் இதுவும் உன்றன் பேருளே"** எனக் கூறியது இதனாலேயாம். ஆதலினால் யார் என்ன சொன்ன போதும் தனது சொந்த அனுபவத்தில் உணர்ந்து கொள்வதே சரியாகும். சுவாமிகள் இதுபற்றி அதிர்ச்சியூட்டும் வாசகத்தைச் சொன்னார். அவ்வாசகத்தை விவிலிய வேதத்தையும், திரிபிடகத்தையும் நன்கு கற்றறிந்த மேற்குநாட்டு அன்பருக்குக் கூறினார். இவற்றை யெல்லாம் கற்றறிந்து ஈற்றில் சுவாமிகளின் அன்பா ளராய் சுவாமிகளது அடிக்கீழமர்ந்து சுவாமிகளின் வாக்கியப் பிரசாதத்தைச் சுவைத்துக் கொண்டிருந்த அந்த அன்பருக்குச் சுவாமி கூறினார்: -

"கிறித்து உன்னை ஏமாற்றுகிறார்
புத்தர் உன்னை ஏமாற்றுகிறார்
நான் உன்னை ஏமாற்றுகிறேன்"

உண்மை ஒருவரின் மொழியிலும் பூரணமாக வெளிப்படுவதில்லை. ஆதலினால் 'அவர் சொன்னார் இவர் சொன்னார் என்று ஏமாறாமல் சொந்த அனுபவத்தில் சரியெனக் கண்டதையே நம்புதல் வேண்டும்" எனச் சுவாமிகள் அருளிச் செய்தார். தமது நற்சிந்தனைப் புத்தகத்தைக் குறித்தே அவர் தயக்கமின்றி 'இது மற்றவருடைய எச்சில்' எனக் கூறியது முண்டு. இவ்வாறெல்லாம் கூறியவற்றை ஓர் உருவக வாய்பாட்டால் மேல்வருமாறு கூறலாம்.

'யோக சுவாமிகளாகிய குருராசசிங்கம் செல்லப்பா சுவாமிகள் எனும் ஆண்மை விஞ்சிய அற்புதச் சிங்கம் காட்டிய வழியிற் சென்று துள்ளிப்பாய்ந்து சென்ற மானைத் தாவிப் பாய்ந்து பிடித்து அதனைக் கடித்துப் பிளந்து சுவை மிக்க பாகங்களை அருந்திவிட்டு மீதத்தை விட்டுச் சென்றது. சுவாமிகளை அண்டிவரும் இளஞ்சிங்கமான அன்பன் எச்சமாக விட்டுச்சென்ற எலும்பையும் தோலையும் கடித்துச் சுவைக்கும் செத்தல் நாயாக இராது தாவிப்பாய்ந்து 'குடிலை' மானைப்பிடித்து அதனகத் தேயுள்ள 'சத்'தான பாகத்தைச் சுவைத்து மகிழவேண்டுமென்பதே சுவாமி களது திருவுளமாகும். நற்சிந்தனையின் 'சத்' தான நல்லமுதை அருந்தாது வெறுமனே பாடிமகிழுதல் எலும்பும் தோலுமான எச்சத்தைச் சுவைத்தல் போன்றதே என்பதை மேலும் விளக்கவேண்டிய தில்லை.

0.4 நன்மோன நிறைவு

நற்சிந்தனையின் சத்தான பகுதி நன்மோன நிறைவே. சுவாமிகள் நன்மோன நிறைவினராயிருந்தார். அந்த நன்மோனம் எல்லாரதும் சுபாவமாயிருப் பதையும் அறிந்தார். தாம் மோனசுகத்தில் வாக்கிறந்த இன்பத்தை அனுபவிப்பதுபோல யாவரும் தங்கள் சுபாவமானஅந்தச் சொல்லமுடியாத சுகக்கடலில் சுகித்துக் கிடக்கவேண்டுமென நாடினார். அதனால் நற்சிந்தனையை அருளிச்செய்தார். ஆனால் வண்டு மலரைச் சுற்றி வட்டமிடும்போது இடும் ரீங்கார ஓசையும், மலரில் மதுவுண்டு வெளிவந்தபின் மந்தமாகமுரலும் இசையும் போன்றதே நற்சிந்தனை. வண்டு மதுவுண்ணும்போது ஒரு சத்தமும் போடாது. அவ்வாறே சுவாமிகளும் மௌனமாயிருந்த இருப்பின் சுகம் மௌனமாகவே இருக்கிறது. அது பேசாமற் பேசும் ஊமை எழுத்தாக இருக்கிறது. அந்த 'ஊமை எழுத்தை அறி' என்று தமது குருநாதனைப் போன்றே அவரும் எமக்குக் கூறுகிறார். 'கங்கோத்திரி' என்று சொல்லப்பெறும் கங்கையின் உற்பத்தித் தானம் புனிதமானது. அது இமயத்தொடரின் குகைபோன்ற ஓரிடத்திலிருந்து அற்புதமான ஓங்கார நாதத்தோடு வெளிப்பட்டுப் பாய்கிறது. அந்த உற்பத்தித் தானத்திலேயே கங்கையின் பரப்பும் ஆழமும் அமைந்திருக்கிறது. கூளாங்கற்களும், பாறைகளுமான தரைப்பகுதியிலே பளிங்குபோன்று பாய்கிறது. பாக்கிய வான்களான சிலர் அவ்விடத்தில் நீராடி மகிழ்கின்றனர். அது நீராடுதற்கு இதமாக இருக்கிறது என்றே தோன்றுகிறது. இவ்வாறே மோனத்தின் முதல் வெளிப்பாடு என்று கொண்டாடத்தக்க நற்சிந்தனைப்பாடல்கள் சில உள்ளன. இக் கங்கை நீண்டதூரம் பாய்ந்து வாய்க்கால் வழியோடி வயல் நிலங்களை வளஞ்செய்வது போன்ற நற்சிந்தனைகள் சிலவும் உள்ளன. இவற்றின் முடிவும் மோனமே, கங்கை உற்பத்தியாகு முன்னர் கைலைத் தொடரின் மலைகளின் 'வயிற்றுள்' இருந்த இருப்பு இரகசியமா னதன்றோ. அவ்வாறே நற்சிந்தனையின் மூலத்தானம் இரகசியமாக இருக்கிறது. அந்த மருமம் மகத்துக்களாலும் சொல்லொணா மருமமென்றே சுவாமிகள் கூறுகிறார். ஆனால் கற்கண்டின் சுவை அதை உமிபவர்க்கே தெரியும் என்று அதனைத் தாம் சுவைப்பவர் என்பதையும், படிப்பவரும் அதனைச் சுவைத்தல் இயலும் என்பதையும் குறிப்பாகச் சுவைத்தல் இயலும் என்பதையும் குறிப்பாகக் கூறுகிறார். நற்சிந்தனையைக் கற்பதால் நாம் அடையும் உச்சப்பயன் இந்த மோன சுகமேயாம்.

0.5 நற்சிந்தனை எனும் நல்லமுதம்

தெய்வதத்துவத்தை அடையச் செய்யும் நற்சிந்தனையுடன் அமரத்துவத்தை அடையச் செய்யும் நல்லமுது கொண்ட சம்பந்தம் தெய்வீகமான தென்றே கொள்ள வேண்டும். அமுதம் பற்றியதோர்

19 ஆம் பக்கம் பார்க்க...

இருந்தபடி இருத்தற்கு அருந்தும் அமுத போனகம்

"இருந்துபார் என்றெனக்கோர் இனியநல்வாக்குத் தந்த
அருந்தவன் என்னும் வல்ல ஆசான்தன் தாள்கள் வாழ்க.
-நற்சிந்தனை-

சுவாமிகளுக்குச் சுவாமிகளின் குரு அருளிச்செய்த ஓர் இனிய நல்வாக்கு "இருந்துபார்" என்பது. குருவருளாலே சுவாமிகள் இருந்தபடியே இருக்கும் பொருளைக் கண்டு அருச்சித்து ஏத்தித் தாமும் இருந்தபடியிருக்கும் இன்பத்தை அனுபவித்தனர் அவ்வின்பத்தைத் தம்மை அண்டி வந்த அன்பர்களும் பெறும் அருட்பெருக்கால்

என்றும் இருந்தபடி - அகப்பேய்
இருந்த பொருள் நீ தான்டி
குருநாதன் சொல்லை - அகப்பேய்
தாய்மையாய்ப் போற்றிடடி,
என்று அகப்பேய்ப்பாட்டையும்
இங்கு நீ
இருந்தபடியே இருந்து வாழுதி
அருந்துயர் உன்னை அடையா தன்றே"

என்ற துறவிப் பாட்டையும் இவைபோன்று இன்னும் சில பாடல்களையும் ஆங்காங்கே அருளிச் செய்தனர். மேல்வரும் பாடலில் அச்சுகத்தையும் அதனை அடையும் படிமுறையையும் விளக்கமாக அருளிச் செய்கிறார்.

இன்பதுன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்மா அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல் நீரால் நிலம் கரைவது முண்டுகொல்
ஞானசற்குரு நற்றிருப்பாதம்
ஆன மட்டும் அகங் குழைந் துருகிப்
போன காரியம் புந்தியில் நினையாது
இடைவிடாது நின்றேத்திப்போற்றி
மடையினீர் பெருகி வழிவது போல
இடைவிடா தினிய ஏகாந்தனாகிச்
சங்கற்ப விகற்பம் தவிர்ந்திடு சமாதியிற்
பொங்கிடும் அமிழ்த போனக மருந்தி
இருந்தாங்கு இனிதே இருந்து
திருந்திய விதேக முத்தீசேர் குவம்மே"

இந்த நற்சிந்தனையில் ஐந்தாம் படியிலே அமுத போனகமிருக்கிறது. ஆறாம் படியிலே அதனை அருந்தி இருந்தபடியே இருக்கும் சுகம் வாய்க்கின்றது. படிமுறை மேல்வருமாறு:

1. இருந்தபடி இருத்தற்கான ஆன்மஞானம்
2. இந்த ஞானத்தை அருளும் சற்குருபாதத்தைப் போற்றல்
3. சற்குருபாதத்தைப் போற்றுதலால் பொருந்தும் ஏகாந்தம்
4. ஏகாந்தத்தில் விளையும் சமாதி
5. சமாதியிற் பொங்கும் அமுதபோனகம்
6. அமுதபோனக மருந்தி இருந்தபடி இருக்கும் இன்பம்.

இந்த இன்ப நிலையில் வாய்க்கும் முத்திப்பேறு இறுதியிற் கூறப்பெறுகிறது.

01 இருந்தபடியே இருத்தற்கான ஆன்மஞானம்

இன்பதுன்பம் இவையே மாயை
அன்புசேர் ஆன்மா அறிவே வடிவம்
ஆதலால் நின்னை அவையோ தீண்டா
கானல் நீரால் நிலம் கரைவது முண்டுகொல்

நாம் மாய உலகையும் மாயும் உடலையும் மெய்யென நம்பி வாழப்பழகிவிட்டோம். அதனால் உலகின் தட்ப வெப்பம், சண்டை சமாதானம் முதலியவற்றாலும் உடலின் இளமை முதுமை, இறப்புப் பிறப்பு, விருப்பு வெறுப்பு என்பவற்றாலும் இன்பதுன் பத்துக்காளாகிக் கவலைக் கடலில் மூழ்கிக் கிடக்கி றோம். இவை நமது இயல்பல்ல. இயல்பழிந்த நிலை. நமது அறியாமையில் தோற்றும் மாயைத் தோற்றங்கள். நமது உண்மை இயல்போ இப்பொய்த் தோற்றங் களுக்கு அப்பாலானது. நாம் சத்தியப் பொருளில் வைக்கப் பெற்றிருக்கும் நித்தியவஸ்து. அறியாமையில் தோன்றும் மாயைக்குச் சூழொணாத அறிவுசொரூப மானது ஆன்மா. அன்பே வடிவாய் அமைந்தவர்களை நன்மை தீமை, இளமை முதுமை, இறப்புப்பிறப்பு, தட்ப வெப்பம், பஞ்சம்பசை எதுவும் தீண்டுவதில்லை. இவ்வாறான விளக்கங்களை யெல்லாம் முதல் மூன்று அடிகளிலும் பொதித்துவைத்துப் பாடிய சுவாமிகள் நாலாம் அடியிலே இவற்றை ஆப்புவைத்து இறுக்கியது போன்ற ஓர் உவமானத்தைக் கூறுகிறார். கானல் நீரால் நிலம் கரைவது முண்டுகொல் என்பது அவ்வுவமானம். இன்பதுன்ப மாயை கானல் நீர். அன்புசேர் அறிவு சொரூபமான ஆன்மா நிலம். கானல் நீரால் நிலம் கரையுமா? இன்ப துன்ப மாயையால் ஆன்மாவுக்குக் கேடுவருமா? இத்தகைய வினாவினால் நாம் இன்பதுன்ப மாயையால் தீண்டப்படாது இருந்தபடியே இருக்கும் ஆன்மா என்ற ஞானத்தைச் சுவாமிகள் உபதேசித்தருள்கின்றார்.

02. ஆன்ம ஞானத்தை அருளும் சற்குருபாதத்தைப் போற்றல்

ஞானசற்குரு நற்றிருப் பாதம்
ஆன மட்டும் அகங்குழைந்துருகிப்
போன காரியம் புந்தியில் நினையாது
இடைவிடாது நின் றேத்திப் போற்றி

ஆன்மாவே நாம் என்ற அறிவை மறந்துவிட் டோம். இவ்வறிவை நமக்கு நினைவூட்டவல்லவர் ஆன்மாவே தான் என்பதை அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு

பூரண ஞானியேயாவார். அத்தகைய ஞானியே ஞானசற்குரு. இந்த ஞானசற்குரு நம்போன்ற தேகக்கோலத்தில் நடமாடுவார். ஆனால் அவர் தான் தேகமல்லவென்பதை நன்றாயறிந்தவர். தேகம் பாம்பின் செட்டை போன்றதென்றே தெளிந்தவர். அவர் நம் போன்றே உலகில் உலவுவார், ஆனால் அவரது உறைவிடம் நாதங்கடந்த ஞாவெளியேயாம். நாறுமுடல் தானல்லன் என்றும் தான் ஞான வெளியில் இருந்தபடியே இருப்பவர் என்றும் இருப்பதே அவரது உண்மைச் சொரூபம். இதுவே அவரது அடிநிலை; முதல் நிலை. அவர் நம்போல நடமாடுவது நமக்கு இந்த உண்மையை உணர்த்துவதற்காக. அவர் அந்த முதனிலையில் நின்று முளைத்த ஒரு கோலமேயாம். முதற் பொருளா கவே - அடிநிலையாகவே என்றும் அவர் இருக்கிறார். இதுவே அரவது திருவடி. நாம் பஞ்சாமிர்தத்தால் அப்பிடேகம் ஆட்டும் மானிடக் கோலத்துப் பாதம் அந்த முதற் பொருளன்று. அது யாவும் முளைத்தற் கிடமான யாதுமல்லாத முண்டகமலர்பதம். அதுவே நாம் ஏத்திப் போற்றும் நற்றிருப்பாதம். இந்த **நற்றிருப்பாதம்** நம் அறிவுக்கு முற்றிலும் அறியவராது. அது மாதவராலும் அறியாத மகத்தானநிலை. ஆனால் அதனை நாம் அறிந்த அளவில் இயலுமான அளவு போற்றுதல் வேண்டும். அதுவே **ஆனமட்டும் போற்றுதல்.** அப்போற்றுதல்கள் உள்ளம் நீராயுருகிப் போற்றும் போற்றுதலாயிருக்க வேண்டும். சுவாமிகள் தமது குருவை இருவிழியும் நீரிறைப்ப ஏத்திப் போற்றுகிறாரல்லவா! இவ்வாறு போற்றுதல் **அகங்குழைந்துருகிப்** போற்றுதல். இப்போற்றுதலில் உலக காரியங்கள் பற்றிய நினைவு இடையூறாகவருதல் கூடாது. அதை உறக்கத்திற் கண்ட தீயகனவாய்க் கழித்து ஆன்மவிழிப்பில் சற்குருபாதத்தைப் போற்றும் அமுத நினைவில் ஈடுபட்டுக் கொண்டிருக் கிறோம். இந்த நினைவிலே உலக காரியங்களான நஞ்சு நினைவு கலக்கலாமா? சென்றன வருவன பற்றிய நினைவுகளை விட்டு ஒரே நினைவாய் நினைத்தல் வேண்டும். இதனைப் **போனகாரியம் புந்தியில்** நினையாது எனச் சுவாமிகள் கூறுகிறார். இத்தகைய நினைவு இடையீடுபடாது நீளநினைதலாயிருத்தல் வேண்டும். சுவாமிகள் இரவுபகலேத்தி என்று கூறுகிறாரல்லவா! இது **இடைவிடாது நின்று ஏத்திப் போற்றி** எனக் கூறப்படுகின்றது. இத்தனை நலன்களும் பொருந்தச் சற்குரு திருவடியைப் போற்றுதல் சற்குருவின் இருந்தபடி இருக்கும் இருப்பு எமக்கும் ஏற்படுதற்குச் சாதகமாகிறது. சுவாமிகள் இருந்தபடியே இருக்கும் பெரும் பேறை அடையக் கூறும் ஒரேயொரு சாதனை சற்குருபாதத்தைப்போற்றலே.

03. சற்குரு பாதத்தைப் போற்றுதலாற் பொருந்தும் ஏகாந்தம்

மடையினீர் பெருகி வழிவது போல
இடைவிடா தினிய ஏகாந்தனாகி

சற்குரு பாதம் ஏகாந்தமாயிருப்பது. அப்பாதத்தைப் போற்றுதலால் விளையும் பாவனாமுதிர்ச்சியாலோ அல்லது சாதகனின் தாகத்தைக் கண்டு அருட்பதம் தனது இயல்பான தனிமுதலான தன்மையைக் காட்டுவ தாலோ சாதகனுக்கு **ஏகாந்தநிலை** பொருந்துகிறது. இந்த ஏகாந்த நிலையில் இருந்தபடியே இருக்கும் இன்ப நிலைக்கு இடையூறான எதுவும் இருப்பதில்லை. ஆதலால் இடைவிடாத ஏகாந்தமாயமைகிறது. அந்த ஏகாந்த சுகம் மாரிகாலத்து நிறை குளத்திலிருந்து மடைவழியே பெருகும் நீர் போல பெருகுகிறது. "இனிது இனிது ஏகாந்தம் இனிது" என்றபடி அவ்வேகாந்தம் மிக இனிதாக இருக்கிறது. ஆதலால் அவ்வேகாந்தநிலையில் சுகிப்பவர் அதனை இழக்க நாடுவதில்லை.

04. ஏகாந்தத்தில் விளையும் சமாதி

"சங்கற்ப விகற்பம் தவிர்ந்திடு சமாதி....."

இனிய ஏகாந்தநிலை முறுகிச் சமாதியாகிறது. இச் சமாதியில் ஒரு பொல்லாப்புமில்லை ஆதிய மகாவாக் கியங்களைச் சிந்தித்துத் தெளிய நாடும் சங்கற்பம், சற்று முன்னர் சொன்ன சற்குரு பாதத்தைப் போற்றும் சங்கற்பம் ஆதிய நல்லுறுதிகளும் கூட இருப்பதில்லை. "ஒரு பொல்லாப்புமில்லையென ஓரவும் மாட்டேன், குருசீடமுறையென்று கொள்ளவும் மாட்டேன், பொங்கல் பூசை செய்ய மாட்டேன்" என்றெல்லாம் சுவாமிகள் பாடுவது இந்தச் சங்கற்பம் தவிர்ந்த நிலையிலேதான். விகற்பம் என்பது எண்ணமெல்லாம் விட்டுத் தூண்போல் இருக்கும் சமாதி. திரையற்ற நீர்போன்ற நிலையில் சிறு அலை எழுவது போன்ற விகற்பமான அயலெண்ணங்கள் எதுவும் எழாத நிலை. அச்சமாதி சுத்தமோனம்.

05. சமாதியிற் பொங்கும் அமுதபோனகம் அருந்தி இருந்தாங்கு இனிதே இருத்தல்

சமாதியைச் சுவாமிகள் 'சும்மா இருத்தல்' என மிகச் சுலபமாகக் கூறுவார். மேலும் 'சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே எனவும் கூறுவார். இச்சுகோதயத்தைப் பொங்கும் அமுதபோனகம் எனவும் கூறலாம். இந்த அமுதபோனகம் சாதகன் சும்மா இருக்க சற்குரு பாதத்திலிருந்து பொங்குவது போலும். சாதகன் சமாதியிலிருக்கச் சற்குரு பாதமே சாதகனாக விளங்கத் தொடங்குகிறது. அதனால் திருப்பாத நினைவொன்றே சாதகனில் விளங்குகிறது. இதனைத் திருவடி மறவாச் சீருடைமை எனவும் கூறலாம். அறிவானும் தானே அறிவிப்பான் தானே அறிவாய் அறிகின்றான் தானே என்று எல்லாம் மலர்பதத்தின் மலர்ச்சியே ஆகின்றது. இவ்வாறு திருவடி நினைவொன்றைத் தவிர மற்றொரு நினைவுமின்றி இருந்தபடியே இருக்கும் இனிய நிலை பொருந்துகிறது. இவ்வின்பம், முத்தி, வீடுபேறு என்று சாத்திரங்கள் கூறுவதை அனுபூதிமான்கள் தங்கள் அனுபவத்தினின்றும் இலகுவாகச் சொன்ன பயிலுந்தமிழே இருந்தாங்கு இனிதே இருத்தல்.

ஆகவே சுவாமிகள் சொல்லும் நற்சிந்தனை எனும் நல்லமுதமாவது திருவடியை இடையறாது நினைந்திருக்கும் முத்திப்பேறேயாகும். சுவாமிகள் தமது சுவானுபவத்தின்று இதன் சுகமணம் கமழ இதனை அனுபவிக்கும் படிமுறையைச் சொல்லியிருக்கிறார். சுவாமிகள் சொன்ன இப்படி வழியே ஏறிச்சென்று திருவடி நினைவில் மூழ்கியிருத்தல் நமது பாக்கியமாகும்.

திருவாசகத்தில் காண்க

1. முன்னுரை

திருவாசகத்தில் ஐம்பத்தொரு தலைப்புக்களின் கீழ் அறுநூற்று ஐம்பத்தெட்டுப் பாடல்கள் உண்டு. ஐம்பத்தொரு தலைப்புகளுள் முதல் நான்கும் நீண்ட பாடல்கள் ஆகும். அவற்றுள் மூன்றாவதாக உள்ளது திருவண்டப்பகுதி ஆகும். திருவண்டப்பகுதி நூற்று எண்பத்தியிரண்டு அடிகளினால் ஆனது. அதிலும் இருபத்து ஒன்பதாவது அடிமுதல் அறுபத்தைந்தாவது அடிவரை "காண்க" என்ற வார்த்தையை உபயோகித்து மணிவாசகப் பெருமான் திருவடிஞானம், சிவனது பெருமை, ஆன்மா, பிரபஞ்சம் என்ற நான்கு விடயங்களை விளக்கி உள்ளார். சைவசித்தாந்தத்தில் கூறப்படும் முக்கிய விடயங்களே இவை ஆதலினால் "காண்க" என்ற வார்த்தையைக் கொண்டு முடியும் இந்த நான்கு விடயங்களையும் தனித்து எடுத்து நோக்குவது பயனுள்ளதாக அமையும் எனலாம். இக்கட்டுரையின் நோக்கம் மணிவாசகப் பெருமான் இப்பகுதியில் கூறும் அந்த நான்கு விடயங்களையும் தொகுத்து நோக்குவாக அமையும்.

2. வியங்கோள் வினை

திருவாசகத்துக்கு உரைகண்ட பலரும் மணிவாசகர் இப்பகுதியைத் தனக்குத் தானே கூறிக்கொள்வதாகவே விளக்கம் அளித்துள்ளனர். அதிலும் தவறில்லை என்று கூறலாம். ஆனால் தமிழ் இலக்கணப்படி "காண்க" என்ற வார்த்தை "க" என்ற எழுத்தை இறுதி விகுதியாகக் கொண்ட வியங்கோள் வினைமுற்று ஆகும். வியங்கோள் வினையை உயர்திணை, அஃறிணை என்ற இருதிணைகளிலும் உபயோகிக்க முடியும். மேலும் அதனை ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் என்ற ஐம்பால்களிலும் உபயோகிக்கலாம். அத்துடன் அதனைத் தன்மை, முன்னிலை, படர்க்கை என்ற மூன்று இடங்களிலும் உபயோகிக்க முடியும். எனவே "காண்க" என்ற வார்த்தையை நான், நாம், நீ, நீங்கள், அவன், அவள், அவர்கள், அது, அவை என இருதிணை ஐம்பால் மூவிடங்களிலும் உபயோகிக்கலாம். எனவே மணிவாசகப் பெருமான் திருவண்டப் பகுதியில் "காண்க" என்ற வார்த்தையோடு முடியும் அப்பகுதிகளில் தான் அப்பாலுக்கு அப்பாலாய்க் கண்டு அனுபவித்த காட்சிகளைத் தான் மட்டும் அன்றி எல்லோரும் காணுங்கள் என்ற கருத்திலேயே கூறி இருக்கின்றார். ஒருவர் தான் கண்டு அனுபவித்த காட்சிகளைக் காணாத மற்றவர்களும் காண வேண்டும் என விரும்புதல் மனித இயல்பு. அதாவது கயிலை யாத்திரை சென்று வந்த ஒருவரோ, வேறு நாடுகளைச் சுற்றிப் பார்த்து வந்த ஒருவரோ தான் கண்ட காட்சிகளை அதுவரை போய்ப் பார்க்காதவர்களுக்கு எடுத்துக் கூறுவது போல மணிவாசகப் பெருமான் திருவண்டப் பகுதியில் வரும் இப்பகுதிகளை அமைத்திருக்கின்றார் எனலாம்.

3. இறைவனின் இரண்டு உபகாரங்கள்

மணிவாசகர் தானாகவே அக்காட்சிகளைக் கண்டாரல்லர். இறைவன் காட்டிக் காணச் செய்யவே தான்கண்டதாகக் கூறுகின்றார். மணிவாசகர் என்ற ஆன்மா சிற்றறிவு உடையது. இறைவனோ முற்றறிவினன். ஆன்மா அறிவிக்க அறியும் தன்மை உடையது. அத்துடன் அது சார்ந்ததன் வண்ணமாகும் தன்மையையும் கொண்டது. அது தானாக அறியும் ஆற்றல் இல்லாததனால் இறைவன் அதனோடு சேர்ந்து நின்று அதன் அறிவை விளக்கி அறியும் ஆற்றலை அடையச் செய்கின்றான். இதனை இறைவனது **"காட்டும் உபகாரம்"** என்று அழைக்கப்படும், மணிவாசகர் இறைவன் தனக்குக் காட்டியதனாலேயே தான் கண்டார் என்பதைத் திருவாசகத்தில் பல இடங்களில் குறிப்பிடுகின்றார். அதற்கு உதாரணமாகச் சில இடங்களை மேல்வருமாறு காணலாம்.

"நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் **காட்டி**" (சிவபுராணம்: 59)

"வண்ணந்தான் அது **காட்டி** வடிவு **காட்டி** மலர்க்கழல்கள் அவை **காட்டி** வழியற்றேனை திண்ணந்தான் பிறவாமல் காத்து ஆண்டாய்" (திருச்சதகம் : 25)

"நாயினுக்குத் தவிசிட்டு நாயினேற்கே காட்டாதன எல்லாம் **காட்டிப்** பின்னும் கேளாதன எல்லாம் கேட்பித்து என்னை மீட்டேயும் பிறவாமல் காத்து ஆட்கொண்டான் எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே" (திருச்சதகம் : 28)

"ஓய்விலாதன உவமனில் இறந்தன ஒண்மலர்த்தாள் தந்து நாயிலாகிய குலத்தினுங்கடைப்படும் என்னை நன்நெறி **காட்டி** தாயிலாகிய இன்னருள்புரிந்த என் தலைவனை" (திருச்சதகம் : 39)

"கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன் தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான் காட்டாதன எல்லாம் **காட்டிச்** சிவம் **காட்டித்** தாள் தாமரை **காட்டித்** தன்கருணைத்தேன் **காட்டி** ஆள்தான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்" (திருவம்மானை : 6)

"கண்ணார் கழல் **காட்டி** நாயேனை ஆட்கொண்ட" (திருவம்மானை : 10)
"நாட்கொண்ட நாண்மலர்ப் பாதம் **காட்டி**" (திருப்பொற்சுண்ணம் : 8)
"பாரிடைப் பாதங்கள் **காட்டிப்** பாசம் அறுத்து" (குயிற்பத்து : 9)
"செந்தழல் புரை திருமேனியும் **காட்டித்** திருப்பெருந்துறை உறை கோயிலும் **காட்டி** அந்தணனாவதும் **காட்டி** வந்தாண்டாய்" (திருப்பள்ளி எழுச்சி : 8)
"நாதனே உன்னைப் பிரிவறா அருளைக் **காட்டி** தேவநின் கழலிணை **காட்டிக்** காயமாயத்தைக் கழித்தருள்" (செத்திலாப்பத்து : 5)
"அழிவின்றி நின்றதோர் ஆனந்த வெள்ளத்திடை அழுத்தி கழிவில் கருணையைக் **காட்டிக்** கடிய வினையகற்றி பழமலப் பற்றறுத்து ஆண்டவன்" (திருப்பாண்டிப்பதிகம் : 8)
"பொய்யெலாம் விடத்திருவருள்தந்து தன்பொன்னடி இணை **காட்டி** மெய்யனாய் வெளி**காட்டி**" (அற்புதப்பத்து: 1)
"தென்னன் பெருந்துறை ஆளி அன்று காதல் பெருகக் கருணை**காட்டித்** தன்கழல்**காட்டி**" (திருவார்த்தை : 9)
"ஞாலம் அதனிடை வந்திழிந்து நன்நெறி **காட்டி**" (திருவார்த்தை : 2)

இவ்வாறு திருவாசகத்தில் இன்னும் பல இடங்களில் இறைவன் தனக்குக் காட்டியதைக் குறிப்பிடுகின்றார். திருவாசகம் முழுவதிலுமே அவ்வாறு அவர் திருப்பித் திருப்பிக் கூறுவதில் இருந்து இறைவன் செய்த உபகாரத்தை மீட்டும் மீட்டும் நினைந்து கொள்கின்றார் மணிவாசகர். அது அவரால் மறக்கமுடியாத அளவுக்கு மிகப்பெரிய உபகாரம் ஆனதனாலேயே "சிறுமை என்று இகழாதே" என்றார். இந்தக் காட்டும் உபகாரம் இறைவன் ஆன்மாவுக்குச் செய்யும் ஒருவகை உபகாரம் மட்டுமே ஆகும்.

இத்துடன் இறைவன் ஆன்மாவுக்குச் செய்யும் இன்னொரு உபகாரமும் உண்டு. அதனைக் **"காணும் உபகாரம்"** என்று அழைக்கப்படும். இறைவன் ஆன்மாவின் அறிவை விளக்கி அறியச்செய்யும் காட்டும் உபகாரம் மட்டும் ஆன்மாவுக்குப் போதியது அன்று. அந்தக் காட்டிய அறிவானது சென்று காட்டப்படும் பொருளைக் காண இறைவன் தானும் ஆன்மாவுடன் நின்று அப்பொருளைக் காணவேண்டும். அங்ஙனம் ஆன்மா பொருளை அறியும் படி இறைவன் தானும் உடன் நின்று அவற்றை அறிவது காணும் உபகாரம் என்று அழைக்கப்படும். திருவாசகத்தில் "உள்ளவா காண வந்து அருள்வாய்" என்பது போன்ற கருத்தையும் அவர் கூறுவதனால் அந்தக் காணும் உபகாரம் சுட்டப்பெறுவதை அறியலாம்.

இவ்வாறு இருவகை உபகாரத்தினாலும் தான் கண்டவற்றைக் காட்டிக் காணச் செய்தவர் குருவாக வந்த இறைவன் என்றும் அவர் காட்டிய காட்சிகளைப் பலபட விரித்துக்கூறும் பகுதியைத் திருவண்டப் பகுதியில் "காண்க" என்ற வார்த்தையோடு முடியும் கருத்துக்கள் என்றும் கொள்ளலாம்.

4. தோத்திரமும் சாத்திரமும்

பன்னிரு திருமுறைகளுள் ஒன்றான திருவாசகம் எட்டாம் திருமுறையாக அமைக்கப்பெற்றுள்ளது. பதினான்கு சாத்திரங்களுள் ஒன்றான சிவஞான போதம் அவற்றுள் முதன்மை வாய்ந்தது. தோத்திரம் முந்தியது சாத்திரம் பிந்தியது. எட்டாந்திருமுறையான திருவாசகத்தையும் சிவஞான போதத்தின் எட்டாவது நூற்பாவையும் தொடர்புபடுத்திப் பல அறிஞர்கள் சிந்தித்துத் தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர். இங்கு பேராசிரியர் வை. இரத்தினசபாபதி அவர்கள் அவை இரண்டையும் பற்றிக் கூறியவை மேல் வருமாறு;

"பெருந்துறை புகுந்து போரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதன் மொழிந்த திருவாசகமே வாசகம் எனக்கொண்டு அவர் பெற்ற கந்தழி நிலை (கந்தழிநிலை என்பது ஒரு பற்றுக்கோடும் இன்றி அருவாகித் தானே நிற்கும் தத்துவம் கடந்த நிலையாகும்) அனுபவமே ஏனைச் சார்புகளின் மூலமாக வந்த ஞானத்திலும் முதிர்ந்த ஞானமாக இருந்தது..... அந்நிலை ஞானம் பெறுவதற்குரிய வழிகள் மூன்று எனினும் தம்மையே "பொய்" எனவும். அனைத்தும் "பொய்" எனவும் உணர்ந்து தெளிந்த வகையில். மணிவாசகப் பெருந்தகைக்குக் கந்தழி நிலை உபதேசத்தையும். அனுபவத்தையும் தம் முதலே குருவாக வந்து நேர்நின்று கொடுத்து அவற்றைத் தவத்தினில் உணர்த்த விட்டு. உணர்ந்து தெளியவைக்கும் நிலையில் இவ்வுலகில் விட்டுச் சென்றது. அத்தகைய கந்தழி நிலை அனுபவம் பெற்ற மணிவாசகப் பெருந்தகை அயர்ச்சியில் நீங்கிய வளர்ச்சியைப் பெற்றுச்சிறந்து. இறைவன் அடியில் இணைந்து நின்று பேரானந்தப் பேரனுபவம் பெற்றார்.. இது இறைவன் தானே முற்பட்டுப் போந்து அருளிய நெறியாதலின் இது பெருந்துறை எனப்பெற்றது. இக்கந்தழி நிலை அனுபவவிளக்கமாக எழுந்த திருவாசகத்தை மூலமாகக் கொண்டு தெளிந்த வகையில் சிவஞான போதம் எட்டாம் நூற்பா மலர்ந்தது."

சிவஞானபோத ஆசிரியரான மெய்கண்ட தேவரின் பிரதான மாணாக்கரே அருணந்தி சிவாச்சாரியார் ஆவர். அவர் இயற்றியருளிய சாத்திர நூலே சிவஞான சித்தியார் ஆகும். சிவஞானசித்தியார் சிவஞான போதத்தின் விளக்கம் என்றே யாவரும் கொள்வர். எனவே சிவஞான போதத்தைப் போலச் சித்தியாருக்கும் திருவாசகத்துக்கும் அதேவித தொடர்பு இருக்கும் என்பது சொல்லாமலே அமையும். கந்தழி நிலை அனுபவத்தைப் பெறும் குரு, லிங்க, சங்கமம் என்ற மூன்று நெறிகளுள் சிவஞான சித்தியார் குரு நெறி பற்றிக்கூறிய விடயங்களோடு திருவண்டப் பகுதியில் சித்தாந்த சாரமான "காண்க" என்ற வார்த்தையோடு முடியும் பகுதிகளையும் ஒப்பிடலாம்.

5. சிவஞான சித்தியாரில் குரு

குரு காட்டிக் காணச் செய்ததைத் தான் கண்டது மட்டும் அன்றி எல்லோரும் காணுங்கள் என்று மணிவாசகர் கூறும் கருத்துக்களைச் சித்தியாரில் குரு தோன்றினால் எவை எல்லாம் தோன்றும், அப்போது ஆன்மாவின் நிலை என்ன என்ற கருத்துக்களோடு ஒப்பிட்டு நோக்கமுடியும்.

குருதோன்றினால் ஆன்மாவிடம் எவைஎல்லாம் தோன்றும் என்பதைச் சித்தியார் இருநூற்று எண்பதாவது பாடல் தருகின்றது. அப்பாடலின் பொழிப்புரை மேல்வருமாறு;

"சூரியகாந்தக் கல்லினிடத்தே சூரியனது சிவந்த ஒளி பிரகாசிக்க அதனிடத்திலே நெருப்பு விளங்கித் தோன்றும். அதுபோலவே ஞானாசிரியர் அருளே திருமேனியாகக் கொண்டு எழுந்தருளி வந்து பக்குவ ஆன்மாவின் சந்நிதியிலே தோன்றி உபதேசிக்க சிவஞானம் அவ்வான்மாவிடத்தே விளங்கித் தோன்றும். அவ்வாறு தோன்ற வாக்கு மனாதீதனாய் நின்ற சிவத்தின் இயல்பு ஆன்ம அறிவின் கண் விளங்கித் தோன்றும். அப்போது ஆன்மாவாகிய தனது இயல்பும் விளங்கித்தோன்றும். அத்துடன் அநாதி பாசமாகிய பிரபஞ்சம் அனைத்தின் இயல்பும் விளங்கித்தோன்றும். அன்றியும் அச்சிவன் அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு மகத்தாகவும், அறிவுக்கு அறிவாகவும் சடசித்துக்கள் யாவற்றோடும் அத்துவிதமாய்க் கலந்து நின்ற தன்மையும் அவ்வான்ம அறிவின் அனுபவமாகத் தோன்றும். மேலும் சித்தியாரின் இருநூற்று எண்பத்தோராவது பாடலில் ஆன்மாவோடு பிரிவின்றி அபேதமாய் நின்ற சிவன் சுத்த நிலையில் பிரிந்து பேதமாய்த் தோன்றும் என்றும் தனுகரண ஆதிப் பிரபஞ்சப் பொருள்கள் எல்லாம் சிவசொரூபமாய்த் தோன்றும் என்றும், உண்மையிலே இப்பிரபஞ்சபேதம் எல்லாம் தான் அல்லவாய் வேறாநிற்க ஆன்மா எப்பொழுதும் நிராதாரமாய் நிற்பான் என்றும் கூறுவதைக்காணலாம்.

6. நான்கு பகுதிகளில் "காண்க"

சிவஞானசித்தியாரில் கூறப்படும் இவ்விடயங்களை நான்காகப் பகுத்துத் திருவாசகத்தின் திருவண்டப் பகுதியிலுள்ள "காண்க" எனவரும் சொல்லோடு முடியும் விடயங்களை அவதானிக்கலாம். அவை யாவன: (1) அடிஞானம் (2) சிவம் (3) ஆன்மா (4) பிரபஞ்சம் என்பன ஆகும். இத்தலைப்புகளுக்கு இணங்க பாடல் அடிகள் ஒழுங்கு அமைக்கப் பெற்றுள்ளன.

6.1 அடிஞானம்

குருதோன்ற "ஆன்மாவில் அடிஞானம் தோன்றும்" என்கிறது சிவஞானசித்தியார். அடிஞானம் என்பது திருவடி ஞானம் ஆகும். "திருவடிஞானமே ஞானம்" மற்றவை ஞானம் அல்ல என்றும் சித்தியார் கூறும். திருப்பெருந்துறை அல்லது துவாதசாந்த வெளியே ஆன்மா திருவடி கூடும் இடம் ஆகும். இதனைத் திருமூலர் **"அடிதலை அறியும் திறம் கூறல்"** என எட்டாம் தந்திரத்தில் கூறிய பாடல்களுள் ஒன்றைக் கொண்டு விளக்கலாம்.

"தலையடி யாவ தறியார் காயத்தில்
தலையடி யுச்சியில் உள்ளது மூலம்
தலையடி யான அறிவை அறிந்தோர்
தலையடி யாகவே தானிருந்தாரே"

இப்பாடலின் கருத்து மேல்வருமாறு: தேகத்தில் தலையை அடிப்பாகம் என்பதை அறிய மாட்டார்கள். அத்தகைய அடிப்பாகமான தலையில் தேகத்தின் மூலம் உள்ளது. இவ்விதம் தேகத்தைத் தாங்குவது தலையில் உள்ள சகஸ்ரதளம் என்று அறிந்தவர்கள் தலையால் அறியப்படும் ஞான சொரூபமாகவே இருந்தவராவர். இந்த ஞானமே அடிஞானம் அல்லது திருவடிஞானம் ஆகும்.

இனி, திருவண்டப் பகுதியில் இதனைக் காணலாம்.

"புவனியில் சேவடி தீண்டினன் காண்க.....
சொற்பதம் கடந்த தொல்லோன் காண்க
சித்தமும் செல்லாச் சேட்சியன் காண்க
பத்திவலையில் படுவோன் காண்க"

சித்தியார் கூறும் ஆன்மாவில் தோன்றும் அடிஞானத்தை மேற்போந்த வரிகளில் காணலாம்.

"புவனியில் சேவடி தீண்டினன் காண்க" என்ற அடியின் மூலம் பிருதுவி தத்துவத்தின் மேலே சகஸ்ர தளத்தில் தனது தேகத்தின் அடியில் சிவனது சிவந்த அடி பதிந்தது என்பதை மணிவாசகர் விளக்குகின்றார். இதனையே அவர் திருவாசகத்தில் பல இடங்களில் திருப்பெருந்துறை என்றும் திருவடி என்றும் குறிப்பிடுகின்றார்.

"சொற்பதம் கடந்த தொல்லோன்" என்பதிலுள்ள சொற்பதம்" என்பது சப்தப் பிரமம் ஆகும். அதுவும் கூட அறிவினால் அமையும் ஓர் ஆதாரமே ஆகும். சப்தப் பிரமத்தைச் சதாசிவம் என்பர் சித்தாந்திகள். ஆனால் நாமரூபம் அற்ற அகண்டாகாய வழிபாட்டில் ஆன்மா உருவமற்ற விந்து நாதமாய் விளங்கும். அந்த நிலையையும் கடந்து நாதாந்த நிலைக்குச் சென்றாலே சிவ அனுபவம் பெறமுடியும். நாதம் என்பது சூக்கும வாக்கு ஆகும். அதுவும் எண்ணத்தின் செயலாகும். எண்ணுவதை விட்டபோது நாதாந்த நிலை கிட்டும். இதுவே ஆன்மாவின் சுபாவ நிலையும் சிவத்தின் நிலையும் ஆகும். பிரபஞ்சச் சிருஷ்டியின் முதல் நிலை நாதத்தோற்றமே ஆகும். இலயத்தின் இறுதிநிலை நாதாந்தம் ஆகும். ஆன்மாவின் அறிவு எண்ணுதலை விட்டுச் சும்மா இருக்கும் நிலை வாய்த்தால் அந்த நிலைதான் சுபாவ நிலை ஆகும். ஆன்மாவும் சிவமும் பல சிருஷ்டி கற்பங்களாகத் தொடர்புள்ளவையாயும்

அப்போதெல்லாம் ஆத்மாவில் சிவம் இருந்து அதனை நடாத்தி வருவதாலும் சிவத்தை மணிவாசகர் அத் தொலைதூரக் காலத்தைத் கண்டதும் "தொல்லோன்" என்றார்.

"சித்தமும் செல்லாச் சேட்சியன்" என்பதில் சித்தம் என்பது பல கற்பகாலமாக அறிவினால் சேகரித்து வைக்கப்பட்ட கருத்துக்குவியலாகும். அகண்டமான சிவத்தை அவ்வாறான சித்தத்தால் அறிய முடியாது. ஆகையினால் "சேட்சியன்" என்றார் மணிவாசகர்.

"பத்திவலையில் படுவோன் காண்க" என்ற அடியினால் திருவடிஞானம் பெற்ற வழியினை மணிவாசகர் கூறுகின்றார். உண்மையில் சிவம் விளங்கும் அகண்ட சொரூபத்தில் அன்பு கொண்டவர் களுக்கு அவன் அகப்படக்கூடியவன் என்பதைத் தனது அனுபவத்தினால் அவர் கூறுகின்றார். அந்த உயர்ந்த அன்பையே அவர் எண்ணமிலா அன்பு என்று அச்சோப் பதிகத்திலும் கூறியுள்ளார்.

சித்தாந்தத்தின் முடிவாக உள்ள திருவடிஞானத்தைச் சொற்பதம் கடந்த நாதாந்த நிலையில் உள்ளது என்பதையும் சித்தத்தில் சேகரிக்கப்பட்ட அறிவுக் குவியலினால் அதனைப் பெறமுடியாது என்பதையும், 'எண்ணமிலா அன்பு' என்ற பத்திவலையினால் அந்தத் திருவடி ஞானத்தை அகப்படுத்தலாம் என்பதையும் இப்பகுதியில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

6.2 சிவத்தின் இயல்பு

சிவஞான சித்தியாரில் "தூரியனாம் சிவம் தோன்றும்", "நேரியனாய்ப் பரியனுமாய் உயிர்க்குயிராய் எங்கும் நின்ற நிலை எல்லாம் முன் நிகழ்ந்து தோன்றும்", "பிறியாத சிவம் தானே பிரிந்து தோன்றும்" எனச் சிவத்தின் இயல்பு கூறப்பெற்றுள்ளது. இங்கு தூரியன் என்றால் தூரத்தில் இருந்து வந்த சிவன் என்பது பொருள் ஆகும். மேலும் நேரியன் என்பது மகாநுண்மை என்ற பொருளையும் பரியன் என்பது மகாபருமை உடையவன் என்ற பொருளையும் தரும். இக்கருத்துக் களுக்கு ஒத்த திருவண்டப் பகுதி மேல் வருமாறு:

"முன்னோன் காண்க.....
தன்னேரில்லான் தானே காண்க
ஏனத்தொல்லெயிறு அணிந்தோன் காண்க
கானப்புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க.....
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்று அவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன்காண்க பழையோன் காண்க
பிரமன்மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க...
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க
இணைப் பரும் பெருமை ஈசன் காண்க...
அரியதில் அரிய அரியோன் காண்க
நாலுணர்வு உணரா நுண்ணியோன் காண்க
அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதும் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க
பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க....
அருள் நனி சுரக்கும் அமுதே காண்க....
குவளைக் கண்ணி கூறன் காண்க
அவளும் தானும் உடனே காண்க"

"முன்னோன்" என்ற வார்த்தை பிரபஞ்சச் சிருஷ்டி ஆரம்பிக்கும் முன்பே சிவம் உள்ளவன் என்ற கருத்தைத்தரும். இதிலிருந்து மணிவாசகர் சிருஷ்டிக்கு முன்னுள்ள நிலையைக் கண்டு அனுபவித்தவர் என்பதை அறியலாம். அதேபோல இப்பகுதியில் கூறப்பெறும் சிவத்தின் இயல்பு யாவற்றையும் அவர் நேர்முகமாய் கண்டு அனுபவித்தவர் என்ற உண்மையை மனதில் நிறுத்திக் கொண்டே இப்பகுதியை நோக்க வேண்டும்.

"தன்னேரில்லோன்" என்பது சிவம் தனக்கு உவமை யாகச் சொல்லக்கூடிய எப்பொருளும் இல்லாதவன் என்பதைக் குறிக்கும். "தன்னேரில்லோன் தானே காண்க" என்பதிலுள்ள "தானே" என்ற வார்த்தை தான் ஒரு முதலாய் அறிவு உருவாய் இருந்து கொண்டு யாவற்றையும் விளக்குபவன் என்ற பொருளைத்தரும்.

"ஏனத்தொல் எயிறு அணிந்தோன் காண்க" என்ற அடி பன்றிக் கொம்பை அணிந்தவன் என்ற பொருளைத் தரும். விஷ்ணுவின் அவதாரம் ஒன்று பன்றியாகும். விஷ்ணுவின் எலும்பை அணிந்தவன் என்றால் காத்தல் கடவுள் மறைந்த பின்பும் சிவம் தான் மறையாது, என்றும் உள்ளவனாக இருப்பதை மணிவாசகர் கண்டார் என்பது பொருள்.

"கானப்புலியுரி அரையோன்" என்றால் புலித் தோலை அரையிலே கட்டியவன் சிவம் என்பது கருத்து. எவ்வாறு புலி ஒன்று மாறி ஒன்றாக அநேக மிருகங்களைப் பாய்ந்து கொல்லுமோ அவ்வாறே ஒன்று மாறி ஒன்றாய் எல்லாவற்றின் மீதும் பாயும் மனத்தை அவ்வாறு பாய்வதை நிறுத்தி இடையிலே கட்டியவன் சிவன் என்ற குறிப்பை மணிவாசகர் தருகின்றார்.

"நீற்றோன்" என்ற வார்த்தை சிவம் நீற்றொளியில் உள்ளவன் என்ற கருத்தைத்தரும். அந்த ஒளி தோழுக்குமேல் வெண்ணிறமாக ஞானியர்களுக்குத் தோன்றும். அதனை வெண்காடு எனவும் அழைக்கப்பெறும். இதனையே திருவாசகத்தில் "தோள் கொண்ட நீற்றனாய்" என்றும் "நீறிலாதவரைக் கண்டால் அம்ம நான் அஞ்சுமாறே" என்றும் "திருநீறே

பூசப்பெற்றேன்" என்றும் இன்னும் பலவிதமாகவும் அவர் விதந்து கூறுவார்.

"இன்னிசை வீணையில் இசைந்தோன்" என்ற அடி உயிரின் நாதத்தொனியில் சிவம் பொருந்தியுள்ளான் என்பதைக் குறிக்கும். அந்த நாதம் முள்ளந்தண்டின் சுழுமுனை நாடியில் உள்ளது. அதனைவீணாத் தண்டம் என்பர். அதில் சிவம் பொருந்தி உள்ளதால் அதனைச் சிவவீணை என்றும் அழைப்பர். அந்த வீணையில் சிவம் இணைந்துள்ளதை மணிவாசகர் காண்கின்றார் என்பதே இந்த அடியின் கருத்தாகும்.

"அன்னது ஒன்று அவ்வயின் அறிந்தோன்" என்ற அடியினால் உயிரின் அப்படிப்பட்ட நாதத்தொனியை அறிந்து அதில் ஒன்றுபடும் ஆன்மாவைச் சிவம் ஏற்றுக் கொள்கிறான் என்பதை மணிவாசகர் அநுபவத்தில் கண்டமை குறிக்கப் பெறுகின்றது.

"பரமன்" என்ற வார்த்தை சிவம் எல்லோருக்கும் மேலானவன் என்பதையும் "பழையோன்" என்ற வார்த்தை சிவம் எல்லோரிலும் பழமையானவன் என்பதையும் குறிக்கும்.

"பிரமன் மால் காணாப் பெற்றியோன்" என்ற அடி பிரமவிட்டுணுக்களால் அறிய முடியாத பெரிய தன்மையை உடையவன் சிவம் என்ற பொருளைத் தரும். இதனால் மணிவாசகர் பிரமவிட்டுணுக்களின் அதிகார பதவியையும் அவர்கள் விகாச முறையில் கீழிறங்கி வருபவர்கள் என்பதையும் அனுபவத்தில் கண்டுணந்தவர் என்பது புலனாகும்.

"அற்புதன்" என்ற வார்த்தை சிவம் எல்லா உயிர்களிலும் விளங்கும் ஞான அக்கினி என்பதையும் "அநேகன்" என்ற வார்த்தை சிவம் தானே எல்லா சீவர்களிலும் கலந்துள்ளவன் என்பதையும் கருதும்.

"ஒருவன் என்னும் ஒருவன்" என்ற அடி சிவம் மட்டும் தானே தனித்து எவரையும், எதனையும் சாராது நிற்கக்கூடிய ஒருவன் என்ற பொருளைத் தரும். இதனால் எல்லாவற்றுடனும் இரண்டறக் கலந்துள்ள சிவத்தை மணிவாசகர் பிரித்துத் தனித்துத்தன் அனுபவத்தில் காண்பது பெறப்பெறுகிறது.

"அணுத்தரும் தன்மையில் ஐயோன்" என்ற அடியினால் மகா சூக்குமமான அணுவின் கூறிலும் அதன் உள்ளும் புறம்பும் அதி சூக்குமமாய்ச் சிவம் வியாபித்திருப்பவன் என்பது குறிக்கப் பெறுகிறது.

"இணைப்பரும் பெருமை ஈசன்" என்ற அடியில் "ஈசன்" என்ற வார்த்தை எல்லாவற்றையும் ஆளும் தலைவன் சிவம் என்பதையும் "இணைப்பரும் பெருமை" என்ற தொடர் சீவனுக்குத் தகுதி நோக்கி எவை எவைகளுடன் பொருத்தவேண்டுமோ அவ்விதம் பொருத்தும் பெருமையான நியதியை ஆள்பவன் சிவம் என்பதையும் கருதும்.

"அரியதில் அரிய அரியோன்" என்ற அடி மேலான சிறந்தவையாகக் கருதப்படுபவை எல்லாவற்றையும் ஒப்பிட்டு சிவம் அவை எல்லாவற்றுக்கும் மேலான சிறந்தவன் என்பதை மணிவாசகர் அனுபவத்தில் காண்கிறார் என்பதைத் தருகிறது.

"நுண்ணுணர்வு உணரா நுண்ணியோன்" என்ற அடியினால் சிவத்தைச் சாத்திர ஞான ஆராய்ச்சியால் அறிய முடியாது என்பதும், அந்த ஆராய்ச்சி அறிவைக் கடந்து விளங்கும் மிக நுட்பமானவன் என்பதும் நேரடியான அனுபவ ஞானத்தினால் மட்டுமே அறியக்கூடியவன் என்பதும் குறிக்கப் பெற்றுள்ளது.

"அந்தமும் ஆதியும் அகன்றோன்" என்ற அடி சிவம் தோன்றியதும் அன்று; முடிவுறுவதும் அன்று; என்றும் உள்ள நித்தியப் பொருள் என்பதைத்தரும்.

"பந்தமும் வீடும் படைப்போன்" என்ற அடியினால் சிவமே உயிர்வர்க்கங்களுக்குப் பந்த நியதியையும், வீடு பேற்றையும் வகுப்பவன் என்பது குறிக்கப்பெறுகிறது.

"நிற்பதும் செல்வதும் ஆனோன்" என்ற அடியில் வரும் "நிற்பது" அசையாப் பொருள்களான மரம், மலை முதலானவற்றையும் "செல்வது" அசையும் பொருள்களான நடப்பன, பறப்பன, ஊர்வன முதலான உயிரினங்களையும் குறிக்கும். சிவம் தானே அவையாவையுமாக உள்ளான் என்பதை "ஆனோன்" என்ற வார்த்தையால் அறியலாம்.

"கற்பமும் இறுதியும் கண்டோன்" என்ற அடியினால் சிவம் கற்பம் என்ற அளவையினால் அளந்து அறியப்படும் பல பிரபஞ்சச் சிருஷ்டிகளையும் அவற்றின் முடிவுகளையும் கண்டுகொண்டு இருப்பவன் என்ற கருத்துத் தெரிவிக்கப் பெறுகிறது.

"தேவரும் அறியாச்சிவன்" என்ற அடி தேவர்கள் பிரபஞ்சச் சிருஷ்டி விகாச முறையில் பூமிக்குக் கீழ்நோக்கி வருவதால் ஊர்த்துவகதியாகிய இலய முறையை அறியமாட்டாமையால் அவர்களால் சிவத்தை அறியமுடியாது என்பது உணர்த்தப் பெறுகிறது.

"பெண், ஆண், அலி என்னும் பெற்றியன்" என்ற அடி சிவமே பெண், ஆண், அலி என்ற பாகுபாடுகளில் கலந்துள்ள தன்மையைக் குறிக்கின்றது.

"அருள் நனி சுரக்கும் அமுது" என்ற அடி தன்னை விரும்பும் அடியவர்களுக்குத் தனது சத்தியாகிய அருளை மிகவும் விரும்பி அளிக்கும் இறவாமருந்து சிவம் என்ற பொருளைத் தரும்.

"குவளைக் கண்ணி கூறன்" என்ற அடியினால் சிரசின் மேலுள்ள நீலோற்பல புஷ்பத்தின் ஒளியில் சிவம் தானும் தனது சக்தியுமாகக் கலந்து விளங்குபவன் என்னும் கருத்துத் தெரிவிக்கப்பெறுகிறது.

"அவளும் தானும் உடனே" என்ற அடியினால் சிவம் தானும் தனது சக்தியுமாகக் கால வேறுபாடு இன்றி ஒரே வேளையில் காணப்பெறுவர் என்பது உணர்த்தப் பெறுகிறது.

சிவத்தின் இயல்பு என்ற இப்பகுதியில் மணிவாசகர் சிவத்தையும், அதுகாறும் எல்லாவற்றுடனும் கலந்து

இரண்டற இருந்தாலும் அப்போது சிவன் தானே பிரிந்து தோன்றிய இயல்பையும் புலப்படுத்துகின்றார்.

6.3 ஆன்மாவின் இயல்பு

சிவஞானசித்தியாரில் ஆன்மா "நிராதாரமாய் நிற்பன்" என்றும் "தானும்" தோன்றும் என்றும்,"தன்னுள்ளே" தோன்றும் என்றும்,"தானாய்" தோன்றும் என்றும், "நின்று" என்றும் "தோன்றிடுவன்" என்றும் குறிக்கப்பெற்றுள்ளது. சிவஞானம் தோன்றிச் சிவம் தோன்ற ஆன்மா தன்னையும் அறிகின்றது என்பதை இதனால் அறியலாம். "நிராதாரமாய் நிற்பன்" என்ற கருத்து அறியவேண்டிய ஒன்று.

நிராதாரம் என்பது ஆதாரங்களை எல்லாம் கடந்து ஆதாரம் அற்றநிலையில் நிற்பதாகும். ஆதாரங்கள் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை எனப் பெறுவன ஆகும். ஆன்மா அவற்றை விடுத்துச் சிதாகாய வெளியில் நிற்பதே நிராதாரமாய் நிற்பதாகும். அவ்வாறு நிற்கும் மணிவாசகர் தன்னைப் பற்றிக் கூறியவற்றை மட்டும் திருவண்டப்பகுதியில் மேல்வருமாறு காணலாம்.

> "நினை தொறும் நினைதொறும் ஆற்றேன்
> அந்தோ கெடுவேன்...
> கண்ணால் யானும் கண்டேன் காண்க
> கருணையின் பெருமை கண்டேன் காண்க
> சிவனென யானும் தேறினன் காண்க
> அவன் எனை ஆட்கொண்டு அருளினன் காண்க."

சிதாகாய வெளியில் ஆன்மா நிற்கையில் உணரும் சிவம் தன்னை விட்டுப் பிரிந்தால் தான் அப்பிரிவை நினைக்கும் தோறும் ஆற்றமாட்டாமல் இருப்பதையும் அவ்வாறு சிவம் பிரிந்து சென்றால் தான் கெட்டு ஒழிய வேண்டியவன் ஆவேன் என்பதையும் "நினைதொறும் நினைதொறும் ஆற்றேன்; அந்தோ கெடுவேன்" என்பதனால் மணிவாசகர் குறிப்பிடுகின்றார். அதிலிருந்து தான் சிதாகாய வெளியில் நிராதாரமாக நிற்பதில் இருந்து இறங்கக்கூடாது என்பதை அவர் உணருவதை அறியலாம். நீத்தல் விண்ணப்பம் முழுவ திலும் இதே கருத்துக்கள் விபரிக்கப்படுவதையும் ஒப்பு நோக்கலாம்.

"கண்முதல் புலனால் காட்சியும் இல்லோன்" ஆகிய சிவத்தை இங்கு "கண்ணால் யானும் கண்டேன் காண்க" என்று கூறுவது முரண்பாடு போலத் தோன்றக்கூடும். ஆனால் அதிலே மிகப்பெரும் உண்மை பொதிந்துள்ளது. மணிவாசகர் தனது புறக்கண்களைக் கொண்டு எங்கும் நிறைந்துள்ள சிவத்தைக் காணமுடியாது என்றும் அதனால் நாம ரூபங்களை மட்டும் காணலாம் என்றும் முன்னதில் கூறியுள்ளார். எனவே, தான் தனது அகக்கண்ணைக் கொண்டே எல்லாவற்றையும் கண்டதை "கண்ணால் யானும் கண்டேன்" என்கின்றார். மேலும் அவர் "யானும்" கண்டேன் என்றதனால் முன்பும் பலர் அவ்வாறு கண்டுள்ளனர் அவர்களைப் போலத் தானும் ஒருவன் என்பதையே குறிப்பிடுகின்றார்.

அடுத்துக் "கருணையின் பெருமை கண்டேன்" என்கிறார் மணிவாசகர். கருணை என்பது இறைவனின் அருளைக்குறிக்கும். அதுவே இறைவனின் சக்தியுமாகும். அது மிகவும் பெருமை வாய்ந்தது. அதனையும் தான் அனுபவித்து உணர்ந்து கொண்டதனை இந்த அடியினால் குறிப்பிடுகின்றார்.

"சிவனென யானும் தேறினன்" என்பது அதற்கு அடுத்த விடயம் ஆகும். சிவம் ஒன்றாய் உடனாய் நின்றதை மட்டுமன்றி வேறாய் நின்றதையும் அவர் கண்டதனை இதன் மூலம் குறிப்பிடுகின்றார்.

மேலும் அவர், அவன் தன்னை ஆட்கொண்டருளினன் என்கின்றார். ஆட்கொள்ளுதல் என்பது சீவபோதத்தை ஒழித்துச் சிவபோதத்துக்கு ஆன்மாவை ஆட்கொள்வதாகும்.
இப்பகுதியில் ஆன்மாவாகிய மணிவாசகர் தன்னைப் பற்றிக் கூறியதை மட்டும் கண்டோம்.

6.4 பிரபஞ்சத்தின் இயல்பு

சிவஞானசித்தியாரில் "தொல்லுலகம் எல்லாம் தன்னுள் தோன்றும்" எனவும் "பிரபஞ்சம் எல்லாம் தானாய்த் தோன்றும்" எனவும் பிரபஞ்சத்தின் இயல்பு குறிக்கப்பெறுகிறது. திருவண்டப்பகுதியில் அதற்குத் தொடர்பானவை மேல்வருமாறு;

> "முழுதோன் காண்க...
> விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
> மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க
> மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க"

"முழுதோன்" என்ற வார்த்தை சிவம் விகாச முறையில் நாதம் முதலாக பூதங்கள் ஈறாக உள்ள முப்பத் தாறு தத்துவங்களாகப் பிரபஞ்சம் முழுவதும் தானாகவே அதில் கலந்து நிற்கின்றான் என்ற கருத்தைத் தரும். நாதாந்த நிலையான மிக உயர்ந்த நிலையில் நின்ற மணிவாசகருக்கு அந்நிலையின் கீழே உள்ள நிலையாவும் தெளிவாகத் தெரியச் சிவத்தை "முழுதோன்" என்றார்.

சிவத்திடம் சுத்தமாயை, அசுத்தமாயை என்ற இரண்டு தத்துவங்களும், மந்திரம் - பதம் - வன்னம் - தத்துவம் - புவனம் கலை என்ற ஆறு அத்துவாக்களும் அவற்றை இயக்கும் சதாசிவமும் உள்ளன. எழுத்தோசையால் சிருஷ்டிக்கப்பட்ட கருத்து வன்னம், பதம், மந்திரம் என்ற சொற்பிரபஞ்சமாகும். அவற்றுக்குத் தொடர்பான தத்துவம், புவனம், கலை என்பன அமையும். சதாசிவத்திடம் அவருக்கு வியூகர்களான பிரமன், விஷ்ணு, உருத்திரன், மகேசன் என்ற நால்வரும் அமைவர். சப்தப் பிரமமான சதாசிவத்தைக் கடந்த

நிலை நாதாந்த நிலை ஆகும். அங்கு விளங்குவது எல்லாப் பொருள்களுக்கும் இருப்பிடமாகவும் புகலிடமாகவும் உள்ள சிவம் ஆகும். சிவம் தனக்குக் கீழுள்ள சத்தி, நாதம், விந்து, சதாசிவம், மகேசன், உருத்திரன், விஷ்ணு, பிரமன் ஆகியோர்களை அடக்கி உள்ளது. சிவநிலை அடைந்த ஆன்மா மேற் போந்த வாறு சிவம் விரிந்து எல்லாப் பொருள்களுமாக முழுவ துமே அச்சிவமாக இருப்பதைக் காணும்.

சிவம் எல்லாப் பொருள்களிலும் உள்ளும் புறம்பு மாகக் கலந்து நிற்பதனால் அப்பொருள்களின் வளர்ச் சிக்கும் அவனே காரணம் ஆவான் என்பதையே "மருவி எப்பொருளும் வளர்ப்போன்" என்றார் மணிவாசகர்.

"மேலொடு கீழாய் விரிந்தோன்" என்பது மேல், கீழ், உள், வெளி என்ற பாகுபாடு கொண்டு விளக்க முடியாத வாறு எல்லாப் பொருள்களோடும் சிவம் மகாசூக் குமமாயும் உயர்வாயும் இருப்பான் என்ற கருத்தைக் குறிக்கும். இதனை வேதம் "ஈசாவாஸ்யம் இதம் சர்வம்" என்று கூறிற்று.

திருவண்டப் பகுதியில் இவ்வாறு பிரபஞ்சத்தின் இயல்பை மணிவாசகர் காட்டுவதைக் காணலாம்.

7. நிறைவுரை

ஆன்மா நிராதரவான சிதாகாய வெளியில் நிற்கச் சிவஞானம் தோன்றுவதையும், அச்சிவஞானம் சிவத்தையும், ஆன்மாவையும், பிரபஞ்சத்தையும் காட் டியும் காணச் செய்தும் வைப்பதையும் மணிவாசகர் நூலறிவால் அன்றி, ஆன்ம அறிவின் அனுபவமாகக் காண்கின்றார். அக்காட்சியைத் தான் மட்டுமன்றி பலர் கண்டுள்ளனர் என்றும் எல்லோராலும் அதனைக் காணமுடியும் என்று "யாவரும் பெற உறும் ஈசன் காண்க" என்றும் வழிகாட்டு கின்றார்.

குறிப்பு – இக் கட்டுரை ஆக்கத்திற்கு முனைவர் ச. சாம்பசிவனார், திரு. மா. இரத்தினசபாபதி என்பவர்களது சில கருத்துக்கள் உபயோகமாய் அமைந்தன.

10ஆம் பக்கத் தொடர்ச்சி

எண்ணப்படிமம் எம்மிடத்தில் பாரம்பரியமாக வந்துகொண்டிருக்கிறது. அமுதம் சிந்தைக்கும் செவிக்கும் இனிமை பயப்பது. அருந்தவேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டுவது. அருந்துமிடத்து மரணமில்லாப் பெருவாழ்வை அளிப்பது. இத்தனை நலங்களும் நற்சிந்தனையின் அந்தரங்கத்தில் மிகுந்திருக்கிறது. இதனை நல்லமுதசம்பந்தம் இலகுவாக விளக்கி நிற்கிறது. மறுபுறம் அமுதம் பெறற்கரியது. பெறுதற்குப் பெரும் பாடுபட வேண்டியது. அமுதம் எழும் போதும் ஆலகால விடத்துடன் கலந்தன்றே எழுந்தது. இறையருளின்றி அதனைத் தவிர்த்து அமுதம் அருந்தலாமோ? அவ்வாறே நற்சிந்தனையிலுள்ள திருவாய்மொழிப் பரவையை நாங்கள் சிவனடியார் என்ற மந்தரமலையை உறுதியாய் நட்டு, நல்லுணர்வு என்னும் வாசுகிக் கயிற்றாற்கட்டி முறுகவாங்கிக் கடைவதனாலேயே மெய்ப்பொருளை நினைப்பற நினைந்திருக்கும் நல்லமுதினைப் பெறலாம். நற்சிந்தனை எனும் நல்லமுது தேவர் அருந்திய அமுதினும் மேம்பட்டதே. தேவர் அருந்திய அமுதம் அமரத்துவத்தையே நல்கும். நற்சிந்தனை எனும் நல்லமுதமோ தேவர்களும் ஏவல்செய்யத் திருவடி நீழலில் இன்பசாகரமோன வடிவாக இருத்திவைக்குமன்றோ! ஆதலாலேதான் அது அமுதம் என்ற அளவிலன்றி நல்லமுதம் என வழங்கப்பெறலாயிற்று. ஆதலால் நற்சிந்தனை எனும் நல்லமுதமே நாம் பெறுதற்குரிய பெறற்கரும் பேறு. அப்பேறடைதற்பொருட்டு எத்துணைப் பெரும்பாடு படினும் தகுவதே.

முடிவுரை

நற்சிந்தனையைப் பாராயணப் பனுவலாகக் கொண்டு சிரத்தையுடன் ஓதிவருவது முதற்படி. அதனை ஆழ நீளச் சிந்தித்துச் சுவாமிகள் அனுபவிக்கும் நல்லமுதச் சுவையையும், அதனை அடைதற்கு அவர் காட்டும் வழிமுறைகளையும் தெளிந்து கொள்ளுதல் இரண்டாம்படி. தெளிந்து கொண்டதன்படி அதனை நமது அகத்தில் சுவானுபூதியாக அனுபவிக்க நாடுதல் அடுத்தபடி. அவ்வாறு நாடி நன்மோன நிறைவான அந்நல்லமுதை அருந்தி திருவடி நீழலில் இன்பசாகர மோனவடிவாய் இருத்தலே இறுதிப்படி.

இதற்குரிய நேரியவழி நற்சிந்தனைப் பரவையுள் மூழ்கி அகமுகமாக நாடுதலே. வாழ்க்கையை அதற்கான பயிற்சிக்களமாக மாத்திரம் கொள்ளுதலே. இதற்கோர் துணை வேண்டுமெனின் அது சுவாமி கிருபை ஒன்றே. ஆயினும் இவ் வாழ்வியலிலே நடைபோடும் அன்பாளர்கள் தம்முள் அளவளாவிக் கொள்ள நாடுதல் இயல்பல்லவா? இந்த நாட்டத்துடனே நற்சிந்தனை யிலுள்ள சில திருவாய் மொழிகள் நோக்கப்படுகின்றன. இந்நோக்குடைய நற்சிந்தனை ஆர்வலர் பலர் உலகெங்கும் உள்ளனர். அவர்களும் தாம் கலங்கரை விளக்காகக் காணும் நற்சிந்தனைகள் பற்றிக் கட்டுரைத்துக் கூறுவரேல் அவையும் இப்பகுதியை அணிசெய்யும்.

'நற்சிந்தனை எனும் நல்லமுதம் உண்டக்கால்
கற்கும் நெறியுண்டோ காசினியில் - விற்றுண்
ஒன்றுமே யில்லாத உன்மத்தன் யோகனுக்கு
என்றுமின்ப மென்றே இசை'.

- நற்சிந்தனை

அமிர்தானுபவம் (தொடர்ச்சி)

அத்தியாயம் - 4

அறிவும் அறியாமையும்

33. தனித்து வனத்தில் துயில்வானைச்
சகத்தில் யாரும் காண்பதில்லை
இனியோ துயிலை அவன்தானும்
இதுவே துயிலென் றறியானாம்.

34. இருப்பே அவனுக் கில்லையல்ல
இருப்பும் துயிலை நிகர்த்ததுவே
இருப்பை உளதோ இலையென்றோ
இறுதி கூற இயலாதாம்.

35. பார்வை உள்ளே திரும்பியதும்
பார்க்கப் பொருள்கள் தெரியாதே
தோர்ந்தால் அவையும் உண்டன்றோ
தெளிவாய் என்ன நடக்குதென்றே.

36. இருட்டில் உள்ள கரியவனை
இவனோ யாரோ காணாராம்
இருட்டில் இருக்கின் றேனென்றே
இவன்தான் அறிவான் பூரணமாய்.

37. அவனின் இருத்தல் இருத்தலின்மை
ஆளைப் போலக் கருதாதீர்
அவனோ இருப்பன் தானாயே
அவனின் சொந்த வழியினிலே.

38. வானம் தெளிவாய் இருந்தாலோ
வடிவம் அதற்கே இருக்காதே
வானம் நிற்கும் தானாயே
வடிவம் அற்ற அப்போதும்.

39. குளத்து நீரோ தெளிவானால்
கூற வடிவம் அதற்கில்லை
குளத்தை அங்ஙன் பார்த்தாலும்
குளமோ நிற்கும் தானாயே.

40. அதுபோல் தன்னில் தானாயே
அமைந்து நிற்கும் பூரணம்தான்
அதுதான் உளதோ இலதென்றோ
அமையா தெமது கருத்துக்கே.

41. விழிப்பில் துயிலின் தடமில்லை
விழிப்பில் துயிலோ பறந்துவிடும்
விழிப்பில் சொந்த இருப்பும் தான்
விளங்கும் கருத்தில் இருக்காதாம்.

42. சாடி ஒன்றை நிலத்திலிட்டால்
சாடி நிலத்தில் இருக்கென்பர்
சாடி அதனை எடுத்துவிட்டால்
சாடி அற்ற நிலம்தானே.

43. வைத்த எடுத்த செயல்களெல்லாம்
வழங்கா வேளை வையகம்தான்
நித்தம் போல நின்றிடுமே
நிற்கும் அதுபோல் பூரணம் தான்.

அத்தியாயம் - 5

சத்து, சித்து, ஆனந்தம்

1. உள்ள பொருளை நிருணயிக்க
உதவா சச்சி தானந்தம்
உள்ளில் நஞ்சு நஞ்சாமே
உரைக்கில் அதற்கும் அது நஞ்சோ!

2. பொன்னுக் கிருக்கும் ஒளிகடினம்
பொதுளும் மஞ்சல் நிறமுமாமே
அன்ன வாறே அமிர்தத்தில்
அமரம் இனிமை பிசுபிசுப்பே.

தொடரும்...

சிவதொண்டன்

தர்முகி ஐ மார்கழி - தை (2017) இதழ் (01-02)

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்

சிவதொண்டன் இன்று எண்பத்தோராண்டுப் பெருந்தகையாக மலர்கின்றான். வயதிற் பெரியோனாயினும் இயல்பில் இளம்பூரணனாகவே உள்ளான். முன்னைப்பழம் பொருட்கும் முன்னைப் பழம் பொருளாயும் பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனாயும் உள்ள சிவபிரானின் இயல்பு சிவதொண் டனுக்கும் இருத்தல் இயல்பன்றோ! சிவதொண்டனின் மகுட வாசகமான "எண்ணுவார் நெஞ் சில் நண் ணுவான் ஈச ன்" என் னும் இனியவாசகமும் எண்ண எண்ண நவநவமான சேதிகளைத் தந்துகொண்டே இருக்கிறது.

இவ்வினிய வாசகம் சுவாமிகளது கருத்துக் கிசைந்ததோர் வாசகமேயாம். "உண்மையுணர்தற்கு நேரியவழி எண்ணுதல்" என்பதே சுவாமிகளது கருத்தாகும். உண்மை எல்லோருள்ளும் உள்ளது. அது எம்மை விட்டு வேறாகாது எம்முடன் கூடியே இருக்கிறது. சொல்லப்போனால் அந்த உண்மையை ஆதாரமாகக் கொண்டே நாமுள்ளோம். கடலிற் றோன்றும் அலைகளைப் போல உண்மைப் பொருளிலேயே நாம் தோன்றி நின்று ஒடுங்குகின் றோம். நான், நீ, மற்றும் மகான்கள் ஆகிய யாவரும் கடலிற்றோன்றும் அலைகளை ஒப்பவரேயாம். அலைகள் ஒவ்வொன்றையும் தனித்தனிப் பிண் டமென்றும், அவ்வொவ்வொன்றுக்கும் எத்தனையோ பேதமுண்டென்றும், அவற்றின் இருப்பிற்குக் கடல் வேண்டியதில்லை என்றும் எண்ணுதல் சரியாகுமா? அவ்வாறே மாந்தர் ஒவ்வொருவரும் தாம் தாம் தனித்துவமானவரென்றும், தமக்கும் மற்றையோர்க்கும் எத்தனையோ வித்தியாசங்கள் உள்ளன என்றும், தமது இருப்புக்கு ஈசனைச் சம்பந்தப்படுத்த வேண் டியதில்லை என்றும் எண்ணுவது சரியாகுமா? இந்த எண்ணத்தால் எத்தனை தீங்குகள் ஏற்படுகின்றன! நான் என்ற முனைப்பு, சுயநலம், விருப்பு வெறுப்பு, அழுக்காறு அவாவெகுளி ஆகிய மனஅழுக்குகள், இவ்வழுக்குகளால் கன்றுமனவெப்பு என்று எத்தனையோ சித்தவிகாரக்கலக்கங்கள் ஏற்படுகின்றன. இவையெல்லாம் துர்ச்சிந்தனையே. இத்துர்சிந்தனை புறத்தளவினதே. கடலின் மேற்பரப்பில் தோன்றும் அலைகளைப் போலத் தோற்கனத்தினவே. ஆழக்கடலில் அலை ஏதுமில்லை. பேதங்கள் ஏதுமில்லை. பெருமை சிறுமையில்லை. அது அமைதியாயிருக்கிறது. அவ்வாறே மாந்தரின் உண்மையியல்பிலும் அவன், இவன், நான், நீ, பெருமை, சிறுமை ஆகிய வேறுபாடுகள் எதுவுமில்லை. அவா, வெகுளி ஆகிய மனஅழுக்குகளுமில்லை. நாங்க ளெல்லாம் ஒரேயாள் என்ற ஒருமையுணர்வும் தன்னை நேசிக்குமப்போ அனைவரையும் நேசிக்கும் பேரன்புப் பெருக்கும், தாம் தரித்திருக்கும் ஈசன் மேல் ஆராக்காதலும், இவற்றால் விளையும் சாந்தமும், இன்பப்பெருக்குமே நிறைந்திருக்கிறது. இத்தகைய நிறைவு தரும் நினைவு நற்சிந்தனையாக இருக்கிறது. ஆகவே புறத்தே பார்க்கத் துன்பம் தரும் துர்ச்சிந்தை, அகத்தே பார்க்க இன்பந்தரும் நற்சிந்தை. மாந்தராய்ப் பிறந்தோருக்கு நற்சிந்தையும், துர்ச்சிந்தையும் இரட்டையாக உள்ளது. இவ்விரட்டையுள், பெரும் பாலான மாந்தரின் சிந்தை துர்ச்சிந்தையாயிருக்கிறது. உல்லாசமாகக் கடற்கரைக்கு உலாவச் செல்லும் மாந்தர் அலைகளையே கடலெனக் காண்பது போல் புற உலகையே பார்க்கின்றனர். அவர்களது சிந்தையும் புறத்தே நிகழும் சண்டையும் சமாதானமும் போட்டியும் பொறாமை யுமான விகாரங்களைப் பார்த்து அவற்றைப் பிரதிபலிக்கும் விகாரமான சிந்தையாகவே இருக்கிறது. ஆழக்கடலுள் மூழ்கி ஆழத்தேயுள்ள அதிசயங்களைக் காண்போர் சிலரேயாவர். அவ்வாறே அகமுகமாக உள்ளே உள்ளே நுழைந்து அகத்தேயுள்ள உண்மையின் பரமாதிசயத் தைக் கண்டு இன்பசாகரமோனத்தை அனுபவிப்போர் சிலரேயாவர். அச்சிலருள் எங்கள் குருநாதனும் ஒருவர். அவர் தாம் அந்த அனுபவத்தில் கணமும் மறவாத நிலையில் இருப்பதுடன் யாவரும் அவ்விதமான நற்சிந்தனையினராயிருப்பதையும் கண்டார். ஆனால் பலரும் அதனை மறந்துவிட்டார்கள். புறத்தே தோன்றும் துர்ச்சிந்தையின் அலைகள் அகத்தேயுள்ள அந்த நன்மோனநிறைவைக் கலக்கிவிட்டன. அந்தக் கலக்கத்தால் தமது அந்தரங்கத்தேயுள்ள அமைதியை மறந்துவிட்டார்கள். மறந்துவிட்ட இந்த அரிய நினைவில் நிலைப்பதற்கான வழி அதனை நினைத்துப் பார்த்தலே. இந்த நினைதலையும் நினைதலுக்கான தேடுதலையும் நாடாமல் நாடுதல் என்றும் தேடாமல் தேடுதலென்றும் சுவாமிகள் கூறுவார். இந்த நாட்டமும் தேட்டமும் மௌனமாயிருந்து இளைப் பாறி விழித்திருத்தலே. இவ்விழிப்பு நிலையிலே நமது சுத்தநிலை ஞாபகத்துக்கு வரும். ஆதலால் ஞாபகப் படுத்தலே பெருஞ்சாதனை எனச் சுவாமிகள் கூறுவார். ஆகவே நமது அந்தரங்கத்திலே கணமும் மறவாது

நற்சிந்தை செய்திருப்பதை உணர்ந்து உறுதியுறுதற்குரிய நேர் வழி கலங்காத சித்தத்துடன் இருந்து ஆழ, நீள, தாகமாக, தூங்காத விழிப்புடன், மையலின்றி எண்ணி எண்ணி இருத்தலே. அவ்வாறு எண்ணி இருக்கும் போது உள்ளேயுள்ள பெரியபொருள் வந்தோம், வந்தோமென்று வெளிப்பட்டுவரும். தொந்தோம் என்ற தாளத்துடன் இதய வெளியிலே ஆடும் திருப்பாதம் தோன்றும். எண்ணி எண்ணிப் பணிவார் நெஞ்சே ஈசன் உறை கோயில் என்ற படி அகத்தேயுள்ள சத்திய நித்திய வஸ்து தரிசனமளிக்கும். நாரை நீர்நிலையில் இருப்பது போலவும், தூண்டிற்காரன் தூண்டிலில் கண்ணாய் இருப்பது போலவும் ஏகாந்தமாய் எண்ணி எண்ணி இருத்தலே வேண்டுவது. அது அப்போதைக்கப் போது அருள் வடிவம் காட்டிக் காட்டிக் கவர்ந்து முடிவில் எப்போதும் நீங்காத சோதியுருவைக் காட்டும். அதனைக் கண்டு தூண்போல் இருந்து முடிவிலாச் சாந்தத்தில் தூங்காமல் தூங்கும் சுகமே பெரும் பேறாக வாய்க்கும். இவற்றை யெல்லாம் எடுதெடுத்துரைக்கும் ஏடு என்ற பொருளிலேயே "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்ற மகுடவாசகத்தைச் சிவதொண்டன் தன் மேனியில் பொறித்திருக்கிறது.

"எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்" என்பதே சிவதொண்டனின் ஆதார சுருதி. இந்தச் சுருதியில் சற்றும் அபசுரம் தோன்றாத சுத்த இசையாக இனிப்பது நற்சிந்தனை என்னும் அமுதகீதம். சிவ தொண்டன் ஏடு, ஏட்டின் மகுடவாசகம் என்பன சுவாமிகளின் சங்கற்பமின்றி வைத்தீஸ்வரப் பெருமா னின் திருவருளால் உதித்தது போல நற்சிந்தனையும் சுவாமிகளின் சங்கற்பமின்றியே தோன்றியது. நற்சிந் தனை தோன்றிய வரலாற்றை அறியும் பொழுது இது நன்கு தெளிவாகிறது. சுவாமிகள் இது போன்ற காரியங்களில் முனைந்து நிற்பவரல்லர். சிவதொண் டன் ஆசிரியர் சுவாமிகளது அருள்வாசகம் ஏதும் சிவதொண்டனில் வந்தால் அது சிவதொண்ட னுக்குத் தனிச்சிறப்பளிக்கும் எனக் கருதினார். தருணமறிந்து சுவாமிகளிடம் தமது கருத்தைத் தயங்கித் தயங்கித் தெரிவித்தார். சுவாமிகள் அப்போதும் அக்கருமத்தில் ஆர்வமின்றியே இருந்தார். சற்றுத் தாமதித்துச் "சரி எழுதிக்கொள்" என்று,

"நமது உயிருக்கு உயிராக இருப்பவர் கடவுளே... அவரை நாம் ஒருபோதும் மறந்திருக்க முடியாது... இப்படியே நாம் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து கீழ்மையான குணங்களைப் போக்கி மேலான தெய்வதத்துவதை அடைவோமாக.

எனத் தொடரும் அருள்வாசகத்தைக் கூறியருளி னார். சுவாமிகள் கூறியதைப் பக்குவமாக எழுதிக் கொண்ட ஆசிரியர் இதற்கோர் தலையங்கம் சூட்டவும் விழைந்தார். தமது விருப்பத்தைச் சுவாமிகளுக்குத் தெரிவித்ததும், சுவாமிகள் அதனை ஒருமுறை வாசிக்குமாறு பணித்தார். வாசிக்கக் கேட்டபின் இதெல்லாம் நல்ல சிந்தனை தானே எனச் சுவாமிகள் அருளினார். இவ்வாறு பிறந்ததே 'நற்சிந்தனை' என்ற நவமொழி. உயிருக்குயிராக இருக்கும் கடவுளைப் பிரிந்து நம்மால் உயிர் வாழ முடியுமா? நினைப்பவர் மனத்திற்கு வித்தாக இருக்கும் இறைவனை மனம் மறந்திருத்தல் முடியுமா? இந்த மறவா நினைவை ஞாபகப்படுத்துதற் பொருட்டுச் சிந்தித்துச் சிந்தித் திருக்கும் நல்ல சிந்தனையாகவே சுவாமிகளின் நிறை மொழியாக ஆணையின் அவதரித்தது நற்சிந்தனை என்பது இதனால் தெளிவாகிறது. அந்த இதழ் முதலாய் (மலர் 1 - இதழ் 3) இதழ் தோறும் ஒன்றும் ஒன்றுக்கு மேற்பட்டனவுமாக நற்சிந்தனைப் பாடல்களும், உரைப்பகுதிகளும் தவறாது வெளிவந்து கொண்டிருக் கின்றன. இவற்றின் முதன்மை நோக்கி இவை தனிப்பக் கங்களில் சித்திரக் கோட்டுக்குள் சிறப்பித்து வெளியி டப்பெறுகின்றன. நற்சிந்தனைகளுள் சில உண்மையை மிகவும் கிட்டி நின்று உரைக்கின்றன. சில எட்டி நின்று உணர்த்துகின்றன. இவ்வேறுபாடு உண்மையைக் கிட்டி நிற்கும் உயர்சாதகர்க்கும், உண்மையறியத் தாகத்துடன் தேடும் ஆரம்ப நிலையி லுள்ள சாதகர் பொருட்டும் வெளியிடப்பட்டதால் நேர்ந்ததே. கிட்டி நின்றோ எட்டி நின்றோ எந்நிலை யில் நின்று அருளப்பெற்றிருப்பினும் இவை சுவாமி களது நிறை ஞானத்தினின்றும் நிறைமொழியில் அருளப்பட்டனவேயாம். இவை நற்சிந்தனை நூலுருப்பெற்று வெளிவருதற்குமுன் இச் சிவ தொண்டன் ஏடுவாயிலாகவே அன்பர்களுக்குத் திருவிருந்தாயிற்று. சிவதொண்டன் தங்களது இல்லத் துக்கு வந்ததும் அன்போடு ஏந்திச் சென்று பூசை யறையில் வைத்து மலர்தூவி வழிபட்டு நற்சிந்தனையை மனனஞ்செய்து வந்தனர். சிவதொண்டன் ஏடு இவ் வாறு நற்சிந்தனை மூலம் உண்மையுணர்தற்கான ஊடகமாயிற்று.

எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன் என்பது போலவே நற்சிந்தனையும் சிந்திக்கச் சிந்திக்க நவநவமான சேதிகளைத் தருவது. உலகில் நிகழும் புதினங்கள், நற்சிந்தனை தரும் நவமான சேதியுடன் ஒப்பிடவும் முடியாதன. உலகப்புதினங்கள் இன்று புதினமாய்ப் பேசப்படும். நாளைபழங்கதையாய்ப் போய் விடும். நற்சிந்தனை கடவுள் நம்மோடு கூட இருக்கும் பெரும் புதினத்தைக் காட்டிவைக்கிறது. கடவுள் நம்மோடு கூடி நமக்குள் இருக்கின்றாரென்றால் அண்டசராசரத்ததிசயம் நம்முள் உள்ளதன்றோ. அத்தகைய அதிசயத்தை நற்சிந்தனை காட்டுகின்றது. எங்கள் சுவாமிகள் கங்குல்பகலற்ற காட்சி காட் டிவைப் பேன் கண்ணே வாராய் என்று அன்பரை அழைக்கின் றாரல்லவா! அவர் இரவு பகலற்ற ஏகாந்த வெளியின் சோதிப்பிரகாசத்தை நற்சிந்தனையூடாகக் காட்டி வைக்கிறார். சுவாமிகள் தம்முடைய இராச்சியத்தின் இன்பத்தை அனுபவிக்கத் தம்மோடு கூடி அன்பரையும் வருமாறு வேண்டுகிறாரல்லவா!, அந்த இராச்சியத்தில் "நீ காணவிருக்கும் காட்சிகள் என்னாற் சொல்ல முடியாது; கடவுளே சாட்சி" என்று கூறுகிறாரல்லவா? அத்தகைய கண்டறியாத காட்சியினை நற்சிந்தனை

நற்சிந்தனை

உ

சிவதொண்டன் சீர்

நாற்றிசை யுஞ்சென்று நல்ல சிவதொண்டன்
ஏற்றிவரு மீச னிணையடியைப் - போற்றிச்
சிவனடியார் நாமென்று திங்கடொறுஞ் சொல்லு
மவனை மறவா தகம் 1

அகந்தூய்மை வேண்டுமுய ரைந்தெழுத்தை நெஞ்சி
லுகந்துரைக்க வேண்டுமொழி யாமற் - சகந்தனிலே
வேள்வியும் வேண்டுமோ வேறாய்க் கடவுளுண்டோ
தாழ்வுண்டோ தொண்டர் தமக்கு 2

தானான சற்குருவைத் தான்போற் றிடுஞ்செல்வக்
கோனாஞ் சிவதொண்டன் கொண்டுவருந் - தேனார்ந்த
கட்டுரையைக் கண்டு களிக்குஞ் சிவனடியார்
நட்பே நலனளிக்கும் நாடு 3

நாடுவார் நாட்டிலே நல்ல மழைபெய்யுந்
தேடுவார் சிந்தையிலே தித்திக்கும் - பாடுவார்
பாவமெல்லாம் போக்கும் பரஞான மாக்குமே
சீவன்சிவ மென்று தெளி 4

தெளியவழி காட்டுஞ் சிவதொண்ட னன்பாற்
பொழியுங் கவிமாரி போதம் - வெளியாக்கி
வேதாந்தஞ் சித்தாந்தம் வேறல்ல வென்றுலகில்
நாதாந்தங் காட்டும் நமக்கு 5

காட்டி வைக்கிறது. நற்சிந்தனை காட்டிவைக்கும் காட்சியை ஞானமென்னும் மூக்குக் கண்ணாடியை அணிந்து கொண்டு நம்மாற் காணமுடியுமெனின் அது நவநவமான சேதிகளை நமக்குத் தோற்றுவித்துக் கொண்டிருக்கும். சுவாமிகள் "நற்சிந்தனை என்னும் நல்லமுதம்" என்று தமது வாய்மொழியாகவே கூறியிருக்கிறார். நற்சிந்தையைக் கற்பகதரு எனவும் கூறியிருக்கிறார். அமுதம் மாயா மருந்து. அது நித்தியவஸ்துவில் நித்தி யமாயிருக்கும் நமது நித்தியத் துவத்தை நல்கும். கற்பகதரு நாம் நினை ந்து வேண்டும் நித்திய வஸ்துவில் நினைப்பு மறப் பற்றிருக்கும் நமது உண்மைநிலையில் நம்மை நிலை யாயிருக்க வைக்கும்.

நற்சிந்தனையைப் போன்றதே நற்சிந்தனையை அருளிய சுவாமிகளின் திருச்சரிதையாகும். சுவாமிகள் தமது குருநாதனை "உண்ணவே உண்ணத் தெவிட்டாத நல்லமுது அண்ணல் செல்லப்பன் அறி" எனப் பாடியிருக்கின்றார். அந்தத் தெவிட்டாத நல்லமுதைத் தித்திருக்கும் சுவை சுவாமிகளது குருதோத் திரப்பாடல் களில் தெளிவாகத் தெரிகிறது. அவ்வாறே சுவாமி களும் தெவிட்டாத நல்லமுதமேயாம். சுவாமிகளை அவரது மெய்யடியார்கள் சொல்லற்கரிதாம் சோதி யென்றும், என்னகந்தனில் எழும் ஓமிசை அமுது என்றும் இன்னும் பலவாறும் போற்றிப் பாடியிருக் கின்றனர். சுவாமிகளது அரிய நினைவை இனிய மொழிகளில் உண்மையுணர்ந்தோரும் உண்மையறியும் நாட்டங்கண்டோரும் கட்டுரை வடிவிலும் நூல்வடி விலுமாக எழுதியுள்ளனர். அவற்றையும் சிவதொண் டன் அவ்வப்போது ஏந்திவருவான்.

இவை சிவதொண்டன் எனும் நந்தவனத்திலே உள்ள தனித்துவமான தேவதருக்கள். இத்தேவதருக் களைச் சூழ்ந்து இன்னும் பல ஞானதருக்களும், மலர்க் கொடிகளும் உள்ளன. செந்தமிழ் மொழியிலேயே அருளிச் செய்யப்பெற்ற திருநூல்களும், அத்திருநூல் களை அருளிச் செய்த மெய்யடியார்களதும், மெய் ஞானியர்களதும் திருச்சரிதைக்ளும் போன்ற னவாம். இவைகளும் உண்மையை அறிந்து, தெளிந்து, உறுதியுறு வதற்கு வேண்டும் அரிய நினைவுகளைத் தருவன வாயிருக்கின்றன. இவை "கண்டறியாதன கண்டேன்" என்ற பெரியார்களின் வாய்மொழிகள் "நினைதொறும் நினைதொறும் ஆற்றேன்" என்ற ஆராமையாலே காண்க காண்க என்று காட்டிவைக்கும் மொழிகள்.

"இடமகன்ற ஞாலத்தே எத்தனையோ அன்பர்
திடந் தந்து போனார் தெரி"

என்பது சுவாமிகளது நற்குறள். சுவாமிகள் நமக்கூட்டும் நல்லமுதத்தைச் சுவைப்பதற்கான தெளிவையும், சுவாமிகளது நன்மொழிகளைத் திடப்படுத்திக் கொள்வதற்கான விளக்கத்தையும் இவ்விடமகன்ற உலகத்தே தோன்றிய பெரியார்களது திருநூல்களும், திவ்விய சரிதைகளும் தருகின்றன. ஆதலாலே அவற்றையும் சிவதொண்டன் அவ்வப் போது ஏந்தி வருவான்.

சிவதொண்டனின் மகுடவாசகமே "எண்ணுவார் நெஞ்சில் நண்ணுவான் ஈசன்". நீ சிவத்தை எண்ணினால் சிவமாவாய் என்பதும் அதுவே. அது சிவயோகம் பாவனை எனப்பெறும். ஒருவன் தன்னை எப்படிப் பாவனை பண்ணுகிறானோ அவன் அப்படியே ஆவான். இதை வேதகால ரிஷிகள் முதல் யேசு, புத்தர், எங்கள் குருநாதன் வரை வாழையடி வாழையாக எல்லோரும் சொல்லி வருவதாம். எங்கள் குருநாதர் தனது "நற்சிந்தனை" யிலும் "அருள்மொழி"யிலும் திருப்பித் திருப்பி இதனை அழுத்தி அழுத்திக் கூறியிருக்கின்றார். நற்சிந்தனையில் "எவன் எதை நினைக்கிறானோ அவன் அதுவாகிறான்" என்றும் அருள்மொழிகளில் "எதை நீ எண்ணுகிறாயோ அது நீ ஆகிறாய். இறைவனை நினைத்தால் இறைவனாவாய், உணவை நினைத்தால் உணவாவாய். எல்லாம் உன்னண்டை வரும். சும்மா இறைவனை வணங்கு. உனக்குத் தேவையானவற்றிற்குக் கட்டளையிடு. அறியவேண்டிய தேவையில்லை" முதலாயின அதற்கு உதாரணங்கள். எனவே சிவத்தை எண்ணிச் சிவமாக இம் மகுடத்தைச் சிவதொண்டன் தாங்கி வருகிறான்.

ஆகவே, மகுடவாசகம் சுருதி கூட்ட, முனிவரின் மறையொலி முழவஞ்செய்ய, மூவர் தேவாரமும் மாணிக்கர் மணிவாசமும் மற்றும் செந்தமிழ்த் தோத்திர சாத்திரமும் மாசில் வீணையிசைக்க, வேதாந்த சித்தாந்தம் தாளம் கொட்ட, மகரிஷி ரமணர் ஆதியோரின் மௌனோ பதேசம் யாழ்பாட, இடம கன்ற ஞாலத்து அன்பர்கள் ஒத்தூத, நற்சிந்தனையாம் அமுத கீதத்தை என்புருகு குரலால் பாடும் சிவ தொண்டன் எண்பத்தோராண்டுப் பெருந்தகையாய்த் தோன்றுகின்றனன். இப்பெருந்தகை எண்ணில் காலம் இருந்தபடியே இருந்து ஞான போனகம் ஊட்டக் குருபரன் அருள்க.

எழிலார் சிவதொண்டன்

ஓம் சிவம் என்று ஓயா தோதி
பாம்பணி பரமன் பதமலர் சூடி
நாம் என்று முள்ளோம் நமக்கொரு குறைவில்லை
நாமொன்றும் அறியோம் எப்பவோ முடிந்தது
உண்மை முழுவதும் உனக்கொரு செயலிலை
உண்மை யிவற்றை ஓயா துணர்த்தும்
நற்சிந் தனையாம் நான்மறை அமுதை
கற்றோர் மற்றோர் களித்திட வளித்து
வெம்மைசேர் நரகினில் வீழ்ந்தழுந் தாமல்
அம்மையாய் அப்பனாய் ஆருயிர்க் குருவுமாய்
எம்மையாள் எழிலார் சிவதொண்ட நீயும்
நாளும் நிலவி நன்கு வாழியவே.
நாளும் நிலவி நன்கு வாழியவே.

- சிவ சிந்தனை

The
Sivathondan

To the Heart that yearns, the Lord draws nigh

Volume: 81 (January - February - 2017) Issue : 01 - 02

NATCHINTHANAI

IN PRAISE OF SIVATHONDAN

Traveling to all points of the compass, good *Śivathoṇḍan*
Praises the Lord whose holy feet we worship,
And tells us every month that we are Śiva's servants;
He will not be forgotten by our hearts.

You must be pure in heart and with a gladsome mind
The supreme five letters incessantly repeat.
Is any worship needed on this earth? Is there a separate God?
For the Lord's true devotees what is there lacking?

Seek the rewarding friendship of God's servants,
Who with enjoyment read the pleasant essays,
Brought by bounteous, majestic *Śivathoṇḍan,*
Who to the Pearless sat-guru gives praise.

Plentiful rain will fall in the land of those who search,
And there will be great sweetness in the hearts of those who seek.
All sins will flee away from those who sing, and heavenly wisdom will be theirs.
That *jiva* is Śiva you must see and clearly understand.

Śivathoṇḍan, shows the path of clarity of mind,
And pours forth a stream' of poems the knowledge to disclose,
That 'twixt Vedānta and Siddhānta no difference is found,
And on this earth to us reveals That which transcends all sound.

TIRUEMPAVAI

The Hymn of tiruempavai opens with some young maids calling out to their friends inside the house, to join them in a procession to sing in praise of the Lord, who is without beginning and end, and who is the source of effulgent light. It is appropriate that in this lyric, the Lord should be extolled as a resplendent light (Paranjothi) as it is composed Tiruvannamalai, where the manifested form of Siva is Light, symbolic (Agni) of the light that purges one of all darkness.

The damsels who wake up before dawn form into a choir, and wind their way to the houses of their friends arguing with those who are not ready, that there should be no spiritual lethargy among the faithful companions of the Lord. The procession of girls moves on and at another door, they playfully mock at a certain friend who usually, spoke so eloquently of her Lord and yet who was late in opening the door to join them. The maiden inside retorts that she is only a young novice and that older devotees should not take amiss her weakness (7. 3.) to which they reply, "Will not those pure of heart sing of our Lord?"

When the girl inside wanted to know whether all the other companions had joined them, the maids outside bade her come and do the counting herself as they were too engrossed in praising the Lord who was dear to them, (7. 4.) who though unfathomable even to the Devas has made Himself nearer to them in Grace and Love. The young *maidens* from outside *remind* their *friend* of her promise to awaken very early in order to awake them. It is strange that she should be so indifferent to join *their choir,* even though they have come to her dwelling place so early *in* the morning. It was incredible to see one so *sensitive* in her love to the Lord unmoved, even when she heard them adoring Him in the most endearing terms. Then follows a happy picture of the dawn when the exulting songs of *birds* and cocks are heard and conch shells sound in the temples, as if it were radiating the light of God's grace everywhere.

We hear the happy innocent voices of children singing a moving paean of love. They imagine themselves as the spouses of the Lord's lovers, and pray to Him who is both the *wisdom* of the ages and the wonder of recent revelations to grant them this boon. The next stanza is an address to the temple vestals to tell them all about their beloved. "His place? His name? *His* kith and kin who?'*(*7. 10. *)*

Then follows the stanza where the maidens dip into the pond singing and sporting gaily in the fullness of their love. While disporting thus, they raise their voice of praise to adore the Lord who sports in Tillai's Hall, and who grants to earth-born mortals, His grace on earth. They pray to Him to grant them bliss everlasting.

Then we have a fine allegory. The floating lily and the lotus flowers that they see while bathing *in* the pond appear to them as their Lord and Sakti. The trailing bands of swans are like the garland round Siva's neck; the conch shell is the bracelet adorning the arms of Sakti: and the vibrant *music* is the serpent twining round the Lord; those who dip in to bathe are the devotees who enjoy the grace of the Lord, who are cleansed of the 'three-fold malas' (7. 13.). Thus they imagine as they joyfully plunge inside the lake. Their joy breaks into a jubilant dance of Sakti whose glory they sing.

'Sing ye the feet of Her who armlet wears,
Who cherishes us as Her children! (7.14.)

Next, we see the lovelorn state of a maid who out of the fullness of her love, has given her life wholly and entirely to Him. Her companions are amused. Who is this peerless, *wise* One who can conquer her thus? (7.15). This stanza might refer to the poet himself. So great was his yearning that those who looked on him wanted to know the author, who was responsible for such rapturous love. This passage reminds us strongly of a fine stanza in Tiruvaimoli (7. 2): where the mother paints the picture of her daughter who has given her heart to the Lord of Tiruvarangam.

The poet resorts to an allegory of the cloud to explain the function of Grace (Sakti); like the cumulus cloud that draws its water from the sea and condenses in showers of rain, amidst thunder and lightning, so also the Sakti (Grace) arises with lightning flashes of her beauty and the sound of her cymbals is like thunder; the rainbow reminds us of her eyebrows; she is gracious to those who love the Lord whose side she never quits, and sends showers of grace to them. (7. 16). The young girls wrapt *in* the over*powering* emotion imagine that even the Gods do not enjoy such bliss as they do, when they sing of their beloved who had cared for them and made *their* hearts his abode and granted them *His* Grace! The Lord is frequently referred as "Jyothi" or brilliance. "The stars pale; Darkness recedes at the approach of the Sun of Glory." (7. 18).

In beauty of thought and expression, stanza (7. 19). is considered a gem *in* Tiruvachakam. It is the prayer of love. The damsels vow to serve none but the true devotees of the Lord.

> "Thou art the only refuge of Thy own children ....
> Grant us the boon of serving Thy devotees only,
> Loving them and 'seeing joy in nought else:

The poet adopts the technique of "Ahatturai", the form of Love poetry in this Lyric. The last stanza ends on a melody of praise. In complete self-surrender, these young damsels contemplate on the supreme Lord's transcendent form and on His loving grace, surpassing human understanding.

INTERPRETATION OF TIRU EMPAVAI

The poet uses symbols and practices prevalent in his time to convey his thoughts and feelings on one of the most entrancing manifestations of the Lord's Grace. He reveals in this lyric, the profundity of his great vision. Like Blake, he had to speak the meaning of eternity in the language of time, consistent with the religious practices of his day.

Many are the mystical interpretations given of this poem. That it is a lyric in praise of Sakti,is clear from the intent of the maidens' songs. Without the mediation of grace, God can never enter into any direct or personal relationship with the universe. In India, the month of December signifies the awakening of the Universe from its slumber of involution and marks the dawn of a new phase in the process of evolution. The Siddhanta theory is that it is through Sakti, the counterpart of Siva, His Grace, that the Supreme evolves all things and life fulfils its destiny. Generally this hymn is taken as an impassioned call to the maidens who symbolise the human soul, slumbering in a stupor of darkness, to rise before dawn in December which marks the beginning of activity in nature, that they may bathe in the refreshing waters of life and be cleansed from the impurity of ignorance.

Vidwan Sabapathy Mudaliyar in his edition of Tiruvachakam in 1871 and Srila Sri Siva Arunagiri Mudaliyar in his edition of Tiruvachakam and Tirukkovai in 1927, stress the idea of the operations of the nine Saktis, in their interpretation of Tiru Empavai. Each Sakti causes the other to move, and the Nava Saktis - Ambikai, Kanagambikai, Gowri, Ganga, Uma, Parasakti, Adi Sakti, Gnanasakti and Kriya sakti - are the principles of evolution. They move in the Suddha Maya and one by one, they cause the various parts of the universe to move by the action of their Grace on them. This is no doubt an ingenious interpretation in line with the philosophic import of Saiva Siddhanta, but much of the spontaneous poetry gets overwrought under the weight of this philosophical approach.

We can approach this lyric only as an example of pure poetry. Nestled on all sides by towering hills and quiet dales, Tiruvannamalai's exhilarating air invigorates the young children particularly, and it is no wonder that both the cantos sung in this sanctuary noted for its music resounding from its rocky hills, should breathe the bewitching vigour and exuberance of young children at play. The poet was on his long and arduous pilgrimage to Tillai. Passing Tiruvannamalai in the month of December, he must have heard and seen the children going from house to house singing, and wending their way to take a bath in the tank. Said Blake:

> When the voices of children are heard on the green,
> And laughing is heard on the hill;
> My heart is at rest within my breast,
> And everything else is still.

This poem unfolds the longing of the poet to enjoy the bliss divine along with the saints of God. Those maidens who stand outside, singing the glory of the Lord in strains of unpremeditated spontaneity are the holy saints of the Lord and the poet is the maid inside. They call on the devotee to join their band: "We are the loved ones of the Lord." Then they chide their friend, that one who was so exultant in the adoration of the Lord and who had expressed such great love in the sweetest terms, should now be so docile. This may refer to the poet's gift of sweet utterance as testified in Tiruvachakam. We can almost hear the languid sighs of the poet as he speaks through the lips of the young maid from inside, and tells his friends that he is still a novice, whereas they are His most faithful saints. The poet had bewailed many a time that he was left behind because of his immaturity, whereas all the other devotees had followed the God-Guru.

Manivachakar fondly imagines that his loneliness would be dispelled if he joins the band of saints. He awaits their coming on the injunction of the Lord. This lyric is a salutation to the principle of Fatherhood and Motherhood as Siva Sakti, and the poet revives his happy memories of Tirupperunturai days, when he and the saints of the Master-Guru sported in adoration of the Lord in the manifested form of Ammai-Appan (Siva-Sakti). In the first nine stanzas, the poet addresses his inner self in appropriate forms, in accordance with his spritual progress. In this reminiscential mood, we find him making a number of references to his early experiences; as for instance in stanza 9 the devotees speak of his exalted state of love which may allude to the days following his initiation at Tirupperunturai.

This was in sharp contrast with his present state of spiritual stupor. After the Poet's Prayer, we share with Manivachakar in his slumber of weariness. At this stage, the favoured sons of God go to his door and recall all the fine promises he had made, and revive his supersensitive sensations of overwhelming love for his Master, and of his pledge to sing of Him and Him only. They succeed in awakening him out of his stupor and finally, they all join in a tuneful procession to the tank where they purify themselves in the waters of Grace, and offer their salutations to God.

In Tiru Empavai, Manikkavachakar floats in the lake of grace relishing with exceeding joy the company of God's loved devotees (stanzas 11-18). Siva Gnana Botham, Sutra XII echoes the same sentiments. "Let the Jivatma after washing off its mala which separates it from the 'Lotus Feet of the Lord', mix in the society of the Bhaktas, whose souls abound with love and who look Upon their forms as His Form".

Finally, Manikkavachakar extols both the transcendence and the immanence of the Lord, followed by salutations to Him who presides over the five-fold acts of creation, preservation, dissolution, involution and grace.

"Thou that art without beginning and end-
Hail to thy Roseate Feet;
Thou Immanent One! Hail to thy Golden Feet,
The source of life, Hail to thy Flowery Feet,
The joy of life - Hail to thy twain feet,
Hail to the beauteous lotus that cannot be seen,
Thy golden grace that made us Thine, Hail, Hail."

From "The Hindu Testament of Love"
by Ratna Navaratnam

GREAT EXPERIENCE GIVES RISE TO GREAT POETRY

An approach has also been made to understand the soul of St. Manikkavachakar by means of his poem. In the perfection of its fine poetry into which we impersonally enter, we behold the perfection of all things and are one with that perfection. Poetry is a fine medium to pay homage to the absolute truth and the reality of the truth makes a sovereign claim upon poetry that it may well be said that great experience gives rise to great poetry. Thus. in Tiruvachakam, all that is offered to the sum of perfection has both the unity of inspiration and the sublime grace of art.

THE AMRITANUBHAVA

CHAPTER : 7

- continue from the last issue

REFUTATION OF AJNANAVADA

1. But for the help of knowledge the very word ignorance would have concealed itself under the ear i.e would never have been heard.

2. A firefly shines by entering into darkness (i.e. it has no real illumination) so the so called beginningless ignorance is utterly false.

3. The ignorance is great only in itself as a dream or darkness is great in itself.

4. The horses of mud cannot be harnessed; or the magician's ornaments cannot be worn.

5. Though taken forcibly in the abode of knowledge the ignorance does nothing. Will there be any ripple of mirage in the moonlight?

6. And what is called knowledge is nothing but ignorance either of the two can be shown by concealing the other (because they resemble each other).

7. Let us discontinue this preamble. Let us first make a search for ignorance. Then the falsity of knowledge will be understood by understanding the real nature of ignorance.

8. If the ignorance really lives in knowledge, why does it not turn its dwelling (i.e. knowledge) into ignorance?

9. It is the inborn nature of ignorance to befool a thing in which it dwells.

10. Now if it be said that the sacred texts declare that the ignorance dwells in the Atman and envelops its resort.

11. (The objection can be answered thus). If the seed of ignorance dwells in the condition where there is no rise of duality then who knows that it exists?

12. The ignorance, being non-intelligent, cannot know itself. Can it be a proof to its existence-

13. So, no sooner is it said that the ignorance would cause its understanding than the very contradiction would compel the speaker to keep silence.

14. If ignorance befools the knower (the Atman) who would say that this is ignorance?

15. Would it not be shameful to call it ignorance if it cannot conceal the conciousness of its own existence?

16. If the clouds really eclipsed the sun, who would enlighten them? If a person is annihilated by sleep, who would experience it?

17. Therefore, if the thing in which ignorance resides becomes ignorant, the ignorance being unable to know itself would vanish.

18. That by which the existence of ignorance is distinguished, can never be itself ignorance.

- To be continued

உ

சிவமயம்

01.	நற்சிந்தனை 7ம் பதிப்பு	300.00
02.	NATSINTHANAI (ENGLISH EDITION)	400.00
03.	வள்ளியம்மை திருமணப் படலம்	150.00
04.	நற்சிந்தனைக் கீர்த்தனைகள் – சாதாரண பதிப்பு	12.00
05.	யோக சுவாமிகள் வாழ்க்கையும், வழிகாட்டுதலும் (2ம் பதிப்பு)	350.00
06.	என் நெஞ்சில் இடம்கொண்ட ஒரு பெரியார் யோக சுவாமிகள்	100.00
07.	நமசிவாய மாலை	35.00
08.	தியான காலச் சிந்தனை (புதிய 3ஆம் பதிப்பு)	35.00
09.	யோக சுவாமிகள் அருள்மொழிகள் (புதிய பதிப்பு)	200.00
10.	சிவத் தியான மாலை (உரையுடன்)	20.00
11.	தாயுமான சுவாமிகள் திருப்பாடல் மூலமும் பொழிப்புரையும்	200.00
12.	தாயுமான சுவாமிகள் பாடல் (மூலம் மட்டும்)	80.00
13.	சைவத் திருமுறைத் திரட்டு (புதிய 4ம் பதிப்பு)	250.00
14.	KANDHA PURAANAM	400.00
15.	YOGUSWAMI TREASURED MEMORIES	300.00
16.	YOGASWAMI LIFE AND SPRRITUAL GUIDANCE	500.00
17.	HOMEAGE TO YOGASWAMY	10.00
18.	சண்முக கவசம்	25.00
19.	முருகன் திருப்பாடற் திரட்டு	50.00
20.	ஈழத்துத் திருப்புகழ்	50.00
21.	சர்வஞானோத்திர ஆகம ஞானபாதவசனம்	50.00
22.	திருவாசகம்	220.00
23.	சிவதொண்டன் – செந்தமிழ் ஆங்கில திங்கள் வெளியீடு	
	ஆண்டுச் சந்தா a) உள்நாடு	600.00
	b) வெளிநாடு US $	30.00

மேற்படி வெளியீடுகளைக் கொழும்பில் பெறும் இடங்கள்

திரு.க. சிவராசா,
5/2, விஷ்ணு ரவர்
82 W.A சில்வா மாவத்தை,
கொழும்பு – 06
தொ.பேசி : 0112559360

திரு. சி. மணிவாசகன்,
20 A 2/3, ஸ்ரேசன் வீதி,
கொழும்பு –06
(சனிக்கிழமைகளில் மாத்திரம்)
0112594462

விண்ணப்பங்கள், கடிதங்கள், காசுக் கட்டளை, தபாற் கட்டளை, காசோலை முதலியன அனுப்ப வேண்டிய பெயரும் விலாசமும்.

Cheque, Drafts and Money Orders should be drawn in favour of Sivathondan Society
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.

Bilingual Monthly, Registered at the G.O.P. as News Paper.
No. Q.D / 189 / NEWS / 2016

a) Printer : Harikanan Printers
K.K.S.Road,
Jaffna.

b) Publisher : M. Thilakaratnam

c) Published for : Sivathondan Society Ltd.
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.
T.P.: 021 - 2222799

Date of Publication : 01.01.2017

Editor : S. Vinasithamby B.A. (Hons)
Sivathondan Nilayam,
Chenkalady.
Tel: 065 - 2240272

If undelivered please return to:
The Manager , "Sivathondan Nilayam"
434, K.K.S. Road, Jaffna, Sri Lanka.